# கிராமச் சீர்திருத்தம்



**தந்தை பெரியார்**

# கிராமச் சீர்திருத்தம்

(புதிய கட்டுரைகள் சேர்க்கப்பட்டு விரிவாக்கப்பட்ட பதிப்பு)

---

## தந்தை பெரியார்

---

PSRPI

**பெரியார் சுயமரியாதைப்**
**பிரச்சார நிறுவன வெளியீடு**
பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை,
வேப்பேரி, சென்னை - 600 007.

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | கிராமச் சீர்திருத்தம் |
| ஆசிரியர் | : | தந்தை பெரியார் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு - 1944<br>விரிவாக்கப்பட்ட பதினான்காம் பதிப்பு - 2021 |
| நூல் அளவு | : | டெம்மி (140 mm x 220 mm) |
| அச்சு எழுத்து அளவு | : | 12 points |
| பக்கங்கள் | : | 48 |
| கட்டமைப்பு | : | இயல்பு (சாதாரணம்) |
| நன்கொடை (குறைந்த அளவு) | : | ரூ.40/- |
| வெளியீடு மற்றும் உரிமை | : | **பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு**<br>சென்னை - 600 007. ☎: 044 - 2661 8161 |
| அச்சிட்டோர் | : | 'விடுதலை' ஆஃப்செட் பிரிண்டர்ஸ்,<br>சென்னை - 600 007. |
| கிடைக்குமிடங்கள் | : | பெரியார் புத்தக நிலையம்<br>● பெரியார் திடல், 84/1 (50), ஈ.வெ.கி. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை -600 007. ☎: 044-26618163<br>● பெரியார் மாளிகை, புத்தூர், திருச்சி-620 017 ☎: 0431-4200987<br>www.dravidianbookhouse.com |

# விரிவாக்கப்பட்ட பதிப்புக்கான
# பதிப்புரை



தந்தை பெரியாருடைய சிந்தனை என்பது தொலைநோக்கோடு புரட்சிகரமான சிந்தனையாகும். ஈரோட்டில் கிராம அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கும் பள்ளியில் தந்தை பெரியாரை அழைத்து பேச வைப்பார்கள். 1936, 1940, 1944ஆம் ஆண்டுகளின் அங்கு தந்தை பெரியார் ஆற்றிய உரைகளின் தொகுப்பே இந்நூல் அய்யா அவர்களின் மாறுதல், பழமை என்பதற்காக ஏற்றுக் கொள்வதில்லை. காலத்தைத் தாண்டிச் சிந்திக்கின்ற சிந்தனை. "நான் சீர்திருத்தத்தையே ஒப்புக் கொள்ளமாட்டேன். கிராமத்தையே ஒழிக்கவேண்டும். நகரம் வேறு; கிராமம் வேறு என்று ஏன் இருக்கவேண்டும்? கிராமம் நகரம் என்கிற பேதம் இருக்கிறதே அது பிராமணன் - சூத்திரன் என்ற பேதம் போன்றது. கிராமம் நகரத்திற்கு சமமாக வேண்டும்" என்று கூறி அதற்கான வழிமுறைகளைக் கூறியுள்ளார்.

கிராமச் சீர்திருத்த கருத்தை பெரியார் விதைத்தார். அவர் விதைத்தது எதுவும் வீண் போகவில்லை; அத்தனையும் முளை கிளம்பி இருக்கிறது; அத்தனையும் மிகத் தெளிவாக மக்களுக்குப் பயன்படக்கூடிய விளை பொருள்களாக, பழங்களாக, கனிகளாகக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. அதற்கான அடையாளம்தான், பெரியார் மணியம்மை அறிவியல் தொழில்நுட்ப கழகத்தின் சார்பில் 20.12.2003அன்று தொடங்கப்பட்ட 'பெரியார் புரா' எனப்படும் திட்டம்.

நம்முடைய அப்துல்கலாம் அவர்கள் குடியரசுத் தலைவராக வந்தவுடன், நம்முடைய **பெரியார் மணியம்மை கல்லூரியைப்** பற்றி விசாரித்தார். அந்தக் கல்லூரியின் சார்பில், சுற்றுவட்டாரத்தில் இருக்கக்கூடிய 65 கிராமங்களைத் தத்தெடுத்து, அந்தக் கிராமங்களில்,

பெரியாருடைய கருத்துகளை, கிராமம் - நகரம் என்கிற பேதமில்லாமல், நகரங்களுக்கு என்னென்ன வசதிகள் கிடைக்குமோ, அவை அத்தனையும் அந்தக் கிராமங்களுக்குக் கிடைக்கவேண்டும்; அதன்மூலம் நம்முடைய மக்கள் பயன்படவேண்டும் என்கிற ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம். அதனைக் கேள்விப்பட்ட குடியரசுத் தலைவராக இருந்த அப்துல்கலாம் அவர்கள், அதனைப் பார்க்கவேண்டும் என்று சொன்னார்கள்.


24.09.2006அன்று 40 அதிகாரிகளுடன் வந்து, அவர் இந்தத் திட்டத்தைப் பார்வையிட்டார். முதன்முறையாக, அப்துல்கலாம் அவர்கள் அந்தக் கல்லூரிக்கு வருகிறார். அப்படி வருகின்றபொழுது, அந்த நிகழ்விற்கான அழைப்பிதழில், ஆங்கிலத்தில் ஒரு தலைப்பைப் போட்டிருந்தோம். Great Men think A like என்ற தலைப்பைப் போட்டு, சிறந்த சிந்தனையாளர்கள் ஒரே மாதிரிதான் சிந்திப்பார்கள் என்று. 1944 ஆம் ஆண்டில் பெரியார் சொன்னதனைத்தான், அப்துல்கலாம் அவர்கள் இப்பொழுது சொல்லியிருக்கிறார் என்று அவர் பங்கேற்கும் அந்த நிகழ்வின் அழைப்பிதழில் அவருடைய கருத்தையும் அச்சிட்டு, 1944 ஆம் ஆண்டு பெரியாரும் சொல்லியிருந்தார் என்பதனை அச்சிட்டிருந்தோம்.

அதனைப் பார்த்தவுடன், அப்துல்கலாம் அவர்கள், நாம் இப்பொழுதுதான் இதனைச் சொல்லுகிறோம் என்று நினைத்திருந்தேன்; ஆனால், தந்தை பெரியார் அவர்கள் 1944 ஆம் ஆண்டிலேயே இதனைச் சொல்லியிருக்கிறார். நான் படிக்கும் காலத்திலேயே பெரியார் அவர்களை நேரில் பார்த்திருக்கிறேன் என்று சொல்லி, வியப்படைந்தார். அதற்குப் பிறகு 5, 6 தடவை பல்வேறு நிகழ்வுகளுக்கு வருகை புரிந்திருந்தார். அவர் எல்லோரிடமும் என்ன சொல்வார் என்றால், நேராகத் தஞ்சை வல்லத்திற்குச் சென்று பார்த்துவிட்டு வாருங்கள் என்று சொல்வார். அதனொடு மட்டுமன்று, இந்த இடத்திற்கு நாங்கள் செய்த சீர்திருத்தத்திற்கு அவர் என்ன செய்தார் என்றால், நாடு தழுவிய அளவில், பல இடங்களில், மற்ற மாநிலங்களிலும் புரா திட்டம் என்று. Providing Urban Amenities Rural Area என்பதனைச் சுருக்கி, **PURA** என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். பெரியார் எனக்கு முன்பாகவே இதனைச் சொல்லியிருக்கிறார், ஆகவே, அதற்குப் ''**பெரியார் புரா**''

என்று பெயர் வைக்கவேண்டும் என்று சொன்னார். அதுபோலவே குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் பெயரிட்டார்!

**பெரியாருடைய முன்னோக்கு இருக்கிறதே, பெரியாருடைய தொலைநோக்கு இருக்கிறதே, அந்தத் தொலைநோக்குச் சமுதாய மாற்றத்திற்கு எவ்வளவு சிறப்பானது என்பதனை எண்ணிப்பார்த்தல் வேண்டும்.**

**1944இல் முதன் முதலில் ஒரு சொற்பொழிவு மட்டும் “கிராம சீர்திருத்தம்” நூலாக வெளியிடப்பட்டது. மேலும் சில சொற்பொழிவுகளையும், டாக்டர் அப்துல்கலாம் அவர்களின் கட்டுரையையும் தொகுத்து விரிவாக்கி வெளியிட்டுள்ளோம். படித்து அய்யாவின் தொலைநோக்கு இணைத்து நூலை லட்சியங்களை வென்றெடுப்போம்.**



பதிப்பாசிரியர்

# கிராம வாழ்க்கையும் ஆசிரியர் கடமையும்

தோழர்களே! இன்று கொடுக்கப்பட்டிருக்கும் விஷயம் மிகவும் முக்கியமான விஷயம். இதைப்பற்றி ஒவ்வொருவரும் தங்கள் தங்களபிப்பிராயங்களைச் சொன்னார்கள். நான் தலைவர் என்கின்ற முறையில் முடிவுரையாக என் அபிப்பிராயத்தைக் கூறுகிறேன்.

நான் ஒரு எதிர் நீச்சல்காரன். என்ன காரணத்தாலோ நம் நாட்டு மக்களின் பெரும்பான்மையான அபிப்பிராயத்துக்கு நான் மாறுபட்டவனாக இருந்து வருகிறேன். பழைமையைப் பாராட்டுவது நமது மக்களுக்கு ஒரு பெருமையாய்க் காணப்படுகிறது. நானோ, பழைமைப் பித்தை வெறுக்கிறவனாக இருக்கிறேன். அதனாலேயே நான் வெகு பேர்களால் வெறுக்கப்படுகிறேன். ஆனாலும், அறிவாளிகள் சீக்கிரம் என் பக்கம் திரும்பிவிடுவார்கள் என்கின்ற நம்பிக்கை இருக்கிறது.

"கிராமமும் ஆசிரியரும்" என்கின்ற பொருள் இன்றைய கூட்ட விஷயமாகும். அதைப்பற்றி மூவர் பேசினார்கள். அது சம்பந்தமாய் என் அபிப்பிராயத்தை தலைவர் முடிவுரை என்கின்ற முறையில் நான் பேசுகிறேன். ஆசிரியர்களை முதலில் எடுத்துக் கொள்ளுவோம். இன்றைய ஆசிரியர்களைப் பற்றி எனக்கு அதிக மதிப்புக் கிடையாது.

அவர்கள் அறிவுக்கு முட்டுக்கட்டை ஆனவர்கள் என்பதே எனது அபிப்பிராயம். இந்த நாட்டில் யாருக்காவது கல்வி அவசியம் என்றால் அது ஆசிரியர்களுக்கே ஆகும். பயன் இல்லாததும்,

பொறுப்பில்லாததுமான பதவி ஒன்று இருக்கின்றது என்றால், அது ஆசிரியர் பதவியேயாகும். எனது தோழர்களிலும் சிலர் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அறிவு உண்டு என்று நான் நினைத்திருக்கிறேன். ஆனால், அந்த அறிவை அவர்கள் ஆசிரியத் தன்மையில் பயன்படுத்த முடிவதில்லை. ஏனெனில், அவர்கள் படிப்புக்குப் பொறுப்பாளிகளும் அல்லர், பிள்ளைகளின் அறிவுக்கு பொறுப்பாளிகளும் அல்லர். அவர்கள் கவலையும், பொறுப்பும் தங்கள் எஜமானர்களை திருப்தி செய்து வாழ்க்கை நடத்த வேண்டியது என்கின்ற ஒன்றேயாகும். "பாப்பாத்தியம்மா, மாடுவந்ததா? பிடித்து கட்டிக்கொள்" என்பதோடு மேய்ப்பவன் பொறுப்பு தீர்ந்துவிடுகிறது. அதுபோல் தான் இன்றைய உபாத்தியாயர்கள் பொறுப்பு.

**அவர்கள் மீது எனக்குள்ள வெறுப்பினால் நான் இப்படிச் சொல்லவில்லை. அவர்களை அந்த அளவுக்கே நிர்பந்தப்படுத்தி வைத்திருக்கும் ஆசிரியர் தன்மையையே நான் சொல்லுகிறேன்.** பரிட்சையில் பிள்ளைகள் தேறும் கணக்கைப் பாருங்கள். பிறகு அந்தப் படிப்பு எதற்குப் பயன்படுகிறது என்கின்ற அனுபவத்தைப் பாருங்கள். அதற்கு ஏதாவது கேள்விமுறை இருக்கிறதா என்பதையும் பாருங்கள். இப்படிப்பட்ட பலனுக்கு காரணஸ்தர்களாய் இருக்கிற ஆசிரியர்களை எந்த அளவுக்கு நாம் மதிக்கக்கூடும். இங்கிலீஷ் ஆட்சி ஏற்பட்டு 200 வருஷமாகின்றது. இதுவரை 100க்கு 8 பேரே படிக்க முடிந்திருக்கிறது. அதிலும் பட்டணங்களைத் தள்ளிவிட்டு கிராமங்களை எடுத்துக் கொண்டால் எத்தனை பேர் படித்திருக்க முடியும். அதிலும் மேல்ஜாதிக்காரர்கள், பிரபுக்கள் என்கின்ற கூட்டத்தார்களைத் தள்ளிவிட்டால் கிராம பாமர மக்களில் 100க்கு 2 பேராவது படித்து இருக்க முடியுமா? படிப்பின் செலவு எவ்வளவென்று பாருங்கள். இந்நாட்டில் ஒரு மனிதனுடைய சராசரி வரும்படிக்கு மேல் ஒரு மாணாக்கனுடைய படிப்புக்குச் செலவு செய்ய வேண்டி இருக்கிறது. இதையெல்லாம் பார்க்கும்போது... கல்வி நிலையைவிட ஆசிரியத் தன்மை நிலை மோசமாக இருக்கிறது.

**கல்விக்கு எப்படி உத்தேசமே இல்லாமல் படிப்பதும், படிப்பிப்பதும் பிறகு படித்த கல்வியும் மனிதனுக்கு பெரும்பான்மையோருக்கு சஞ்சலத்துக்கும், துக்கத்துக்கும் பயன்படுகின்றதோ, அதுபோல் தான் ஆசிரியர் நிலையும் உத்தேசமே இல்லாமல் ஏற்பட்டு வெறும் வயிற்றுப்**

**பிழைப்புக்காகவே ஒரு வியாபாரம் போலவும், ஒரு ஜீவனோபாய தொழில்முறை போலவுமே பயன்படுத்தப்பட்டு வருவதாகும்.** வியாபாரமும், தொழில் முறையுமென்றால் நாணயத்தைப் பிரதானமாக எண்ணாமல் லாபத்தையே பிரதானமாய் எண்ணும் காரியங்களாகும். ஆகவே, இவர்கள் எப்படி மக்களுக்கு அல்லது அறிவுக்குப் பொறுப்பாளியாவார்கள்? இவர்களிடம் எப்படி குழந்தைகளை ஒப்புவித்து பிற்கால வாழ்வின் கதியை நிர்ணயிக்க முடியும்?

எதற்காக கல்வி படிப்பு என்கின்றோமோ, அதற்கு ஏற்ற ஆசிரியர்கள் மிகமிக அருமையாய் இருக்கிறது. ஆசிரியர்கள் என்கின்ற மனிதர்களைப் பற்றி நான் குறைகூறவில்லை. ஆசிரியத்தன்மை என்பதற்கு உள்ள யோக்கிதை பற்றியே நான் சொல்லுகின்றேன்.

**நான் ஆசிரியரானாலும் சரி, மற்றும் வேறு ஆசிரியர்களானாலும் சரி. இவ்வளவுதான் முடியும். ஏனென்றால், ஆசிரியர்களைத் தயார் செய்யும் நிலை அப்படிப்பட்டது. ஆசிரியர் தனக்கேற்பட்ட உத்தரவுப்படிதான் கல்வி கற்பிக்க வேண்டியவர்களே ஒழிய, தங்களுக்குள்ள அறிவுப்படியோ, சக்திப்படியோ கற்பிக்கக் கூடாதவர்களாயிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிர்ப்பந்தத்தில் இருக்கிறார்கள். ஆசிரியர் பரிட்சையென்பதே நிர்ப்பந்தங்கள் பரிட்சையென்று சொல்லவேண்டுமேயொழிய, அறிவையுண்டாக்கும் கல்வியை போதிப்பதற்கு தகுதியாக்கும் பரிட்சை என்று சொல்லுவதற்கில்லை.**

இந்த லட்சணத்தில் ஒரு ஆசிரியர் பழைமைப் பித்தனாகவோ, ஜாதி மத வெறியனாகவோ இருந்துவிட்டால், பிள்ளைகளின் கதி அதோகதிதான்! குளிக்கப்போய் சேற்றை பூசிக்கொண்ட மாதிரி, புத்தி படிக்கப்போய் முட்டாள்தனத்தை ஏற்றுமதி செய்துகொண்டு வந்தது போலவே முடியும்.

**ஆதலால், ஆசிரியர்கள் பயன்படக்கூடியவர்களாக இருக்கவேண்டுமானால் அவர்கள் ஓர் அளவுக்காவது சுதந்திர புத்தியுள்ளவர்களாகவும், பகுத்தறிவுக்கு சிறிதாவது மதிப்பு கொடுக்கக் கூடியவர்களாகவும் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட ஆசிரியரிடம் படிக்கும் பிள்ளைகளே பரிட்சை பாஸ் செய்யாவிட்டாலும் அறிவுடையவர்களாகவாவது ஆகலாம்.**

ஆதலால், நான் முதலில் ஆசிரியர்களையே கேட்டுக் கொள்ளுகிறேன். சுதந்திர புத்தியுடையவர்களாக இருங்கள்.

பகுத்தறிவை நேசியுங்கள். அதைக் கனம் பண்ணுங்கள். இரட்டை மனப்பான்மையை ஒழியுங்கள். அதாவது உங்கள் சொந்த அபிப்பிராயம் என்று உங்கள் மதத்துக்கு ஆகவோ, ஜாதிக்காகவோ பின்பற்றி நடப்பது வேறொன்று; பிள்ளைகளுக்கு போதிப்பது மற்றொன்று என்கின்ற மாதிரியான இரட்டை மனப்பான்மையை விட்டு ஒழியுங்கள். இப்படிச் செய்வதற்கு ரொம்ப தைரியம் வேண்டும். ஓர் அளவுக்கு கஷ்ட நஷ்டங்களை ஏற்கவும் தயாராயிருக்க வேண்டும்.

**ஆசிரியர்கள் பயன்படக்கூடியவர்களாக இருக்கவேண்டுமானால் அவர்கள் ஓர் அளவுக்காவது சுதந்திர புத்தியுள்ளவர்களாகவும், பகுத்தறிவுக்கு சிறிதாவது மதிப்பு கொடுக்கக் கூடியவர்களாகவும் இருக்கவேண்டும். அப்படிப்பட்ட ஆசிரியரிடம் படிக்கும் பிள்ளைகளே பரிட்சை பாஸ் செய்யாவிட்டாலும் அறிவுடையவர்களாகவாவது ஆகலாம்.**

**கிராமச் சீர்திருத்தம்**

இனி கிராமம் என்பது பற்றி சில பேசுகிறேன். கிராமம் என்பது மிக பரிதாபகரமான காட்சியாகும். கிராம ஜனங்கள் நிலை மிக பரிதாபகரமானதாகும். பட்டணத்துக்காகவே கிராமங்கள் இருந்து வருகின்றன. கிராமச் சீர்திருத்தமென்பது பட்டணங்களில் வாழ்பவர்களின் சவுகரியத்துக்காகச் செய்யப்படும் காரியமேயாகும். கசாப்புக் கடைக்காரன் ஆட்டைப்பற்றி கவலை கொள்ளுவது போல்தான் பட்டணத்துக்காரன் கிராமத்தைப் பற்றி கவலை கொள்வதாயிருக்கிறது. அரசியல் தானாகட்டும், சமூக இயல் தானாகட்டும் எவ்வளவுதான் முற்போக்கடைந்தாலும் கிராமக்காரனின் நிலை ஒரே மாதிரிதான். அவன் பாடுபட்டு உழைத்துக் வஸ்துகளை யுண்டாக்க வேண்டியதும், அதன் பலனை பட்டணக்காரன் அனுபவிப்பதுமல்லாமல் வேறென்ன நன்மை கிராமக்காரனுக்கு இருக்கிறது?

கால்நடை வளர்ப்பைப் பற்றி கிராமவாசிகளுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று ஒருவர் சொன்னார், கால்நடைகள் வளர்க்கப்பட்டால் கிராமத்துக்கு என்ன லாபம்? பட்டணத்தில் இருப்பவன்தான் பால், தயிர், மோர், நெய் நன்றாக சாப்பிடுவான்; கிராமத்தான் சாதத்தில் தண்ணீர் விட்டுத் தான் சாப்பிடுவான். அதுதான் உடலுக்கு பலம் தருமென்று அவன் கற்பிக்கப்பட்டிருக்கிறான். ஒரு கிராமத்தான் குழந்தை தனக்கு

கொஞ்சம் நெய்விடும்படி கேட்டால் அவன் தாய்க்கு உடனே கோபம் வந்துவிடும். 'உனக்கு நெய்யை ஊற்றிவிட்டால், நாளைக்கு நெய்க்கார மாப்பிள்ளைக்கு என்ன ஊற்றுவது?'' எனக் கேட்பாள். (நெய்க்கார மாப்பிள்ளை என்றால் கிராமங்களில் சுற்றி நெய்வாங்கிக்கொண்டு போய் பட்டணங்களில் விற்கும் நெய்வியாபாரி.) இவ்வளவு சிக்கனமாக கிராமத்தார்கள் பிழைத்தும் பயனென்ன? மீத்துவைத்த பணங்களை வக்கீல்களும், போலீஸ்களும், ரிவின்யு கிரிமினல் அதிகாரிகளும் கொள்ளை அடித்துக்கொண்டு, போதாக்குறைக்கு அவர்களிடம் பாண்டு எழுதிக்கொள்கிறார்கள்.

(கிராமவாசிகளின் சவுகரியத்தைப் பாருங்கள். அவர்களுக்கு நல்ல தண்ணீர் கிடையாது. வெளிச்சம் கிடையாது, சுகாதாரம் கிடையாது, நாடகம் கிடையாது, சினிமா கிடையாது, பார்க், சிங்காரத் தோட்டம் கிடையாது. அதிகாலையில் இருட்டில் போகவேண்டும்; அந்தியில் இருட்டின பிறகு வீட்டுக்கு வரவேண்டும். அவனால் அரசன், வியாபாரி, லேவாதேவிக்காரன், மற்ற உத்தியோகஸ்தர்களெல்லாம் பிழைக்கிறார்கள். அப்படிப்பட்டவனுக்கு பட்டணத்தில் வசிக்கும் ஒரு கக்கூசுக்காரன், தெருக் கூட்டி, மேஸ்திரி ஆகியவர்களுக்கு இருக்கும் சவுகரியமும் இல்லை. ஜாதி முறையில் பறையன் என்றொரு ஜாதி வருணாசிரம முறையில் வகுத்திருப்பது போலவே கிராமம், கிராமத்தான் என்கின்ற இரண்டும் வாழ்க்கை முறையில் கீழ்ஜாதியார்கள் போல் வகுக்கப்பட்டிருக்கின்றன.

**கிராமமென்பதாக ஒன்று ஏன் இருக்க வேண்டும்? என்பது எனக்குத் தெரியவில்லை. பட்டணத்தான் சவுகரியத்துக்கு என்பதல்லாமல், மற்றபடி கிராமம் எதற்கென்பது எனக்கு விளங்கவில்லை. இப்படிப்பட்ட கிராமங்களையெல்லாம் அழித்துவிடவேண்டும், எல்லோரையும் பட்டணங்களுக்குப் போகும்படி செய்யவேண்டும். அதுதான் கிராமச் சீர்திருத்தம் என்பேன்.** ''கிராமங்களுக்கு போ'' என்பது இப்போது ஜனத் தலைவர்கள் என்பவர்கள் உபதேசமாக இருக்கிறது. இதில் ஏதாவது நாணயம் இருக்க முடியுமா? பி.ஏ.வும்., எம்.ஏ.யும் கிராமத்துக்குப் போய் மக்களுக்கு என்ன செய்யமுடியும்?

கூடவே காப்பி, கோக்கோ, சிகரெட், பீடி, கிராமபோன், ரேடியோ கொண்டுபோனாலொழிய, அங்கு அரை நிமிஷம் பி.ஏ., எம்.ஏ.க்காரன் தங்க முடியமா? இல்லாவிட்டால் தலைவலி, உடல் வலி, தூக்கம்

பிடியாமை, மூளை வேலை ஓடாமை என்கின்ற வியாதி வந்துவிடாதா? பி.ஏ., எம்.ஏ. படிப்புக்கும், கிராம முன்னேற்ற வேலைக்கும் ஏதாவது சம்பந்தமுண்டா? இவர்கள் கிராமத்துக்குப் போவதால் கிராமக்காரனுக்கு அதிக தொல்லையே அல்லாமல் இவனால் நல்லது என்ன ஆகக்கூடும்?

விவசாய விஷயத்தில் பி.ஏ., எம்.ஏ.க்கு என்ன தெரியும்? கால்நடை விஷயத்தில் என்ன தெரியும்? சுகாதார விஷயத்தில் என்ன தெரியும்? இவன் சொன்னால் கிராமத்தான் கேட்க வேண்டாமா? அவன் புத்தி பழைமையில் ஒட்டிக்கொண்டிருக்கும் போது பி.ஏ., எம்.ஏ. யாருக்குச் சொல்லுவான்? சொன்னபடி கிராமத்தான் கேட்பதாயிருந்தாலும், அந்தப்படி செய்ய இருவருக்கும் பணம் முதலிய சாதன சவுகரியங்கள் எங்கே என்று பாருங்கள்.

கிராமங்களுக்குப் போ என்பது ஒரு பித்தலாட்டமான சொல், அல்லது அர்த்தமற்ற சொல். கிராமத்தானுக்கு இருக்கும் பழைமைப்பித்தும், மூடநம்பிக்கையும் ஒழிய வேண்டும்.

இன்றைய பி.ஏ., எம்.ஏ.யும் மூடநம்பிக்கைக்காரனாகவே இருக்கிறான். பழைமைப் பித்தனாகவே இருக்கிறான். பழைமைப் பித்துதான் இன்று தேசியமாயிருக்கிறது. அதைப் போதிப்பதிலேயே எல்லோரும் ஜனத்தலைவர்களாகி விடுகிறார்கள். இன்று கிராமப்புனருத்தாரண வேலையில் முதல் திட்டம் எல்லோரும் பனங்கருப்பட்டியும், கைக்குத்து அரிசியும் சாப்பிடவேண்டுமென்பதாகும். இதற்கு யார் ஒப்புவார்கள்? இத்தனை பேருக்கும் கைக்குத்து அரிசிக்கு எத்தனை பேர் குத்தவேண்டும்?

ஆண் பிள்ளைகள் நெல் குத்துவார்களா? பெண்கள்தான் இனி நெல் குத்துவார்களா? பட்டணங்களிலுள்ள பெண்கள் முறத்தகலம் பட்டுக்கரை சீலையும், வைர நகைகளையும் பூட்டிக்கொண்டு ஆர்மோனியம், வீணை, சதுர்ப்பாட்டு கதை காலட்சேபம் பழகிக்கொண்டு, உல்லாசமாய் கேளிக்கையில் இருக்கும்போது கிராமத்துப் பெண்களை நெல்லுக்குத்தவும், கருப்பட்டி காய்ச்சவும் சொன்னால் அவர்கள் எப்படிக் கேட்பார்கள்? சில மூடங்கள் கேட்பதாகவே வைத்துக்கொண்டாலும் நாம் சொல்வது தான் யோக்கியமாகுமா? கிராமத்தில் பிறந்ததற்காக நெல்குத்த வேண்டியதா என்று கேட்கின்றேன்.

ஒரு தோழர் கிராமக் கைத்தொழிலைப் பற்றி பேசினார். கிராமக் கைத்தொழில் என்று ஒன்று ஏன் இருக்க வேண்டும்? பட்டணத்துக்காரனுக்கு யந்திரத்தொழிலும், கிராமத்தானுக்குக் கைத்தொழிலும் என்று யார் சிருஷ்டித்தார்கள்? ஏன் அப்படி சிருஷ்டிக்கவேண்டும்? ராட்டினம் சுற்றுவதும், தொடையில் கயிறு திரிப்பதும், மண்வெட்டியிலும், கோடரியிலும், சுத்தியிலும் மண்வெட்டி, மரம் பிளந்து கல் உடைப்பதும்தான் கிராமத்தானுக்குச் சொந்தமா? இது தான் கிராம முன்னேற்றமா என்று கேட்கிறேன்.

**பட்டணத்துக்காரனுக்கு யந்திரத்தொழிலும், கிராமத்தானுக்குக் கைத்தொழிலும் என்று யார் சிருஷ்டித்தார்கள்? ஏன் அப்படி சிருஷ்டிக்கவேண்டும்? ராட்டினம் சுற்றுவதும், தொடையில் கயிறு திரிப்பதும், மண்வெட்டியிலும், கோடரியிலும், சுத்தியிலும் மண்வெட்டி, மரம் பிளந்து கல் உடைப்பதும்தான் கிராமத்தானுக்குச் சொந்தமா?**

எவ்வித முன்னேற்ற முயற்சியும் இல்லாமல் பட்டணத்தான் எவ்வளவு கொள்ளையடிக்கிறான். வியாபாரி, லேவாதேவிக்காரன், வக்கீல், வைத்தியன், அதிகாரி, உத்தியோகஸ்தன் ஆகியவர்களின் கொள்ளையைப் பாருங்கள். இதை ஒழிப்பதல்லவா கிராம முன்னேற்றமாகும். இந்தக் கூட்டத்தாரல்லவா கிராமங்களை கசக்கிப் பிழிகின்றவர்கள்! இதைவிட்டுவிட்டு இந்த சாதாரண வாத்தியார்கள் - அதிலும் கஞ்சிக்குப் போதாத ஏழை வாத்தியார்கள் - மாதம் 15 ரூபாய்க்கு தாளம் போடும் இந்த வாத்தியார்கள் கிராமத்திற்கு போய் என்ன செய்ய முடியுமென்று கேட்கின்றேன்.

ஏதாவது நீங்கள் கிராமத்துக்குப்போய் செய்ய வேண்டுமானால், அவர்களுடைய பழைமைப் பித்தை ஒழியுங்கள். மூடநம்பிக்கையை அகற்றுங்கள். அவர்களை பட்டணவாசிகள் எப்படி எப்படி ஏமாற்றுகிறார்களென்பதை எடுத்துக்காட்டி கண்விழிக்கச் செய்யுங்கள் தலைவிதியை மறக்கடித்து பகுத்தறிவை உண்டாக்குங்கள். அவர்களை எல்லாம் பட்டணங்களுக்குக் குடிபோக விரட்டுங்கள். இவ்வளவு நீங்கள் செய்தால் அதுவே கிராம முன்னேற்றமான வேலையாகும். மற்றபடி நீங்கள் என்ன செய்தாலும் அது பயன்படாது. உங்களுக்கும் அதற்கு மேல் சக்தியிருக்காது. சவுகரியமும், சாதனமும் கிடையாது.

உதாரணமாக, இராமநாதபுரம் ஜில்லாவில் ஒரு கிராமத்துக்குப் போயிருந்தேன். அங்கு மீட்டிங்குக்கு 400 பேர்கள் வந்திருந்தார்கள். அவர்களில் 375 பேர்களுக்கு நரம்புச் சிலந்தி நோய் இருந்தது. அந்த ஊர்க்கிணறு, கிணற்றுத் தண்ணீர் மேலே வருவதைவிட மேலேயிருக்கும் தண்ணீர் கிணற்றுக்குள் சுலபத்தில் போகத் தகுந்த மாதிரியான கிணறாகும். அதன் தண்ணீரை பரிசுத்தம் செய்ய யாருக்கும் புத்தி கிடையாது. உபாத்தியாயர் ஒருவர் இருந்தார். அவரும் காலில் கட்டுப்போட்டுக்கொண்டுதான் இருந்தார். நான் கேட்டதற்கு அவர் கவனிக்கிறதுக்கு ஒருவருமில்லை. நான் என்ன செய்ய முடியுமென்று பதில் சொன்னார். இவைகளெல்லாம் அரசாங்கத்தைப் பொறுத்த வேலையே ஒழிய, பொது ஜன சேவையால் ஆகக்கூடிய காரியமோ, ஒரு திண்ணைப் பள்ளிக்கூட வாத்தியாரால் ஆகக்கூடிய காரியமோ அல்ல. அரசாங்கத்தின் கையில் இருந்த பொறுப்பை ஜனத் தலைவர்கள் என்பவர்கள் பிடுங்கிக்கொண்டு தங்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

இவை மாற்றமடைய வேண்டுமானால் பகுத்தறிவை மக்களுக்குப் போதியுங்கள் என்பதுதான் எனது ஆசை. பகுத்தறிவு விஷயத்திலும் நீங்கள் அடிமைப்பட்டிருக்கிறீர்கள். அது விஷயத்தில் உங்கள் அறிவுப்படி நீங்கள் போதிக்க முடியாது. உங்கள் அறிவுப்படி நீங்கள் நடக்கவும் முடியாது என்கின்ற நிலையில் நீங்கள் இருக்கிறீர்கள்.

ஓர் உபாத்தியாருக்கு மூன்று புத்தி இருக்கின்றன. அதாவது, அவருக்குச் சரியென்று தோன்றும் ஆராய்ச்சி புத்தி ஒன்று; பிள்ளைகளுக்கு இன்னபடிதான் கற்பிக்கவேண்டும் என்று படிப்பித்த நிர்ப்பந்த புத்தி, இரண்டு; தனக்குத் தோன்றுகிறபடியும், தான் படிப்பிக்கிறபடியும் நடக்க முடியாத பழைமைப் பித்தும், கட்டுப்பாட்டு நிபந்தனையும் கொண்ட கோழை புத்தி, மூன்று. இந்த மூன்று புத்திகளுடன் நீங்கள் கிராமங்களை புனருத்தாரணமோ, சீர்திருத்தமோ செய்வதென்றால் அது பயன்படக்கூடிய காரியம்தான். ஆனாலும், **பகுத்தறிவைப் பயன்படுத்த தைரியம் கொண்டுவிட்டால் இந்த கஷ்டங்கள் சுலபத்தில் ஒழிந்துபோகும் என்றே நினைக்கிறேன்.**

**(ஈரோடு லண்டன் மிஷன் போதனா முறை பாடசாலை லிட்டரெரி சொசைட்டியின் கூட்டத்தில் 23.07.1936ஆம் தேதி தந்தை பெரியார் ஆற்றிய சொற்பொழிவு.)**

**‘குடிஅரசு’ - சொற்பொழிவு - 02.08.1936**

**ooo**

# கிராமச் சீர்திருத்தம் என்பது புரட்டு

தோழர்களே!

கிராம உத்தியோகஸ்தர்கள் ஸ்பெஷல் டெக்ஸ்ட் பயிற்சி சாலையின் 6ஆவது ஆண்டு விழாவுக்குத் தலைமை வகிக்கும்படியான கவுரவத்தை எனக்கு அளித்ததற்கு நான் இதன் முக்கியஸ்தர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நீங்கள் முதலில் எதிர்பார்த்தபடி இவ்வாண்டு விழாவுக்கு ஒரு ரெவின்யூ அதிகாரி தலைமை வகித்திருந்தால் மிகவும் பொருத்தமாய் இருந்திருக்கும். ஏதோ எதிர்பாராத காரணத்தால் அவர்கள் வரமுடியாமல் போனதால். எதிர்பாராத நிலைமையில் என்னைத் திடீரென்று பிரேரேபித்து விட்டீர்கள். உங்கள் ஆண்டு விழாவில் பேசுவதற்கு எனக்கு மிகவும் ஆசைதான். நான் இதை ஒரு நல்ல சந்தர்ப்பமாகவும் கருதுகிறேன். ஆனால், ஓர் உபன்யாசகராய் இருந்தால் எவ்வளவு சுதந்திரமாய்ப் பேசுவேனோ, அவ்வளவும் தலைவன் என்கின்ற முறைமையில் பேசுவதற்கு முடியாது. ஏனெனில், தலைமை வகிப்பவருக்குச் சில பொறுப்புகளும். கடமைகளும் உண்டு. உபன்யாசகர்களின் சொற்பொழிவுகளையும். அபிப்பிராயங்களையும் தலைவர் மறுக்கவோ. கண்டிக்கவோ செய்வது தர்மமாகாது.

ஏனெனில், தலைவர் முடிவுரை கூறியபின் உபன்யாசகர்களுக்குச் சமாதானம் சொல்ல சந்தர்ப்பமில்லை அல்லவா?

அன்றியும், நீங்களும் சில நிர்ப்பந்தங்களுக்குக் கட்டுப்பட்டவர்களாவீர்கள். ஆகையால். நான் இப்போது பேசப்போகும் உபன்யாசகர்களின் அபிப்பிராயங்களைத் தழுவி சில வார்த்தைகள்

பேசிவிட்டு என் அபிப்பிராயமாக சில வார்த்தை முடிவுரையில் சொல்லிவிட்டு இவ்விழாவை முடிவுக்குக் கொண்டு வருகிறேன்.

**முடிவுரை:**

தோழர்கள் கரூர் கே. வேலாயுதம் அவர்கள் "கிராம முன்னேற்றத்துக்கு ஆன வழி" என்பது பற்றிப் பேசினார். பிறகு இந்த ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல் தோழர் துரைசாமி பிள்ளை அவர்கள் "கிராமக் கல்வி" என்பது பற்றிப் பேசினார். இருவர் பேசியதும் ஏறக்குறைய எல்லாம் என் அபிப்பிராயத்தை தழுவியதேயாகும். அவர்கள் இரண்டு முக்கிய விஷயங்களைப் பற்றியும் நன்றாய் கையாண்டு இருக்கிறார்கள். அவற்றிலிருந்து நானும் பல விஷயங்களைக் கற்றுக் கொண்டிருக்கிறேன் என்று சொன்னால் அது மிகையாகாது. கிராம அதிகாரிகளும், ஆரம்ப ஆசிரியர்களும் என்பது பற்றி நான் சில வார்த்தைகள் சொல்லவேண்டும் என்றும் என்னை கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

ஆனால், நான் தலைவன் என்கின்ற முறையில் உபன்யாசகர்களை அறிமுகப்படுத்தி விட்டு உபன்யாசகர்களை எடுத்துக்கொண்ட விஷயத்துக்குள்ளும், குறிப்பிட்ட நேரத்துக்குள்ளும் பேசும்படி பார்த்துக்கொள்ளுவதே தலைவரின் நியாயமான கடமையாகும்.

ஆகையால், எல்லாவற்றையும் கவனித்து நான் பேசவேண்டு மென்று நீங்கள் எதிர்பார்ப்பதையும் சேர்த்து முடிவுரையாக சில வார்த்தை பேசுகிறேன். அவற்றை நீங்கள் ஒருவருடைய அபிப்பிராயமாகக் கொள்ள வேண்டுமே ஒழிய, ஓர் உபதேசமாகக் கொள்ளாதீர்கள் என்று உங்களை முதலில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தோழர்களே!

கிராமதிகாரிகளும், ஆரம்ப ஆசிரியர்களும் ஆகிய இரு கூட்டத்தார்கள் அவர்களது தொழிலின் காரணமாக அடிமைகளேயாவார்கள். ஏனெனில், இருவர்களும் அரசியல் முறைப்படி இரு இலாகாவின் கடைசித்தர அடிமைகள்.

விளக்கமாகச் சொல்லவேண்டுமானால், கிராம அதிகாரிகள் "தலைவிதி" - தாசில்தார், ரிவின்யூ டிவிஷன் ஆபீசர் முதலியவர்களுடைய பேனா முனையில் அடங்கி உள்ளதாகும். இந்த கிராம அதிகாரிகளுடையது மாத்திரமல்லாமல், இவர்களது பின்

சந்ததிகளுடைய "தலைவிதி"யும் அது போன்றதேயாகும். கிராம அதிகாரிகள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு முறிச்சீட்டு எழுதிக் கொடுத்த அடிமை என்று சொன்னால் மறுப்பதற்குப் போதிய காரணங்கள் கிடையாது. அதுபோலவே ஆரம்ப ஆசிரியர்கள் தலையெழுத்தும் இன்ஸ்பெக்டர் ஆப் ஸ்கூல், ஜில்லா போர்ட் பிரசிடெண்ட், சேர்மென் ஆகியவர்கள் கை பேனா முனையில் தான் இருக்கிறது என்பது என் அபிப்பிராயம். இவர்களுக்கு அளிக்கப்படும் நற்சாட்சிப் பத்திரங்கள் எல்லாம் இவர்கள் நல்ல நிபந்தனை இல்லாத அடிமைகளா என்பதைப் பொறுத்ததே தவிர, இவர்களின் நடத்தையையோ, சாமார்த்தியத்தையோ பொறுத்தது என்று அடியோடு சொல்லிவிட முடியாது.

ஆனால், இவர்கள் மேல் அதிகாரிகளால் யோக்கியமாய் கையாளப்படுவார்களேயானால், இவர்களும் நல்ல யோக்கியர்களாகவும், கெட்டிக்காரர்களாகவும் அமைவார்களேயானால் இவர்களால் ஜன சமூகத்துக்கு எவ்வளவோ நன்மை செய்ய வசதி இருக்கிறது. இவர்களது நிலைமை அடிமைத்தன்மையானது என்றாலும், இவர்களது பதவி நல்ல பொறுப்பும், பயனும் உள்ளது என்பதை நான் அழுத்தம் திருத்தமாய்ச் சொல்லுவேன். இவர்கள் புது உலகத்தை சிருஷ்டிக்கலாம். கிராமாதிகாரி என்பவர் கிராம மக்களுக்குத் தகப்பனார் ஆவார். சிட்டி ஃபாதர் City father என்பதுபோல் இவர்கள் (Village fathers) வில்லேஜ் ஃபாதர்ஸ் ஆவார்கள். அதுபோலவே ஆரம்ப ஆசிரியர்களும் பிள்ளைகளுக்கு வெளிச்சத்தைக் கொடுத்து அந்த வெளிச்சத்திலேயே வாழ்நாள் முழுதும் நடக்கும்படி செய்யக்கூடிய ஓர் உயர்ந்த தச்சன் ஆவார்கள். இவர்கள் இருவர்களும் இன்றைய உலக வாழ்வில் ஒரு முக்கியமான ஸ்தானம் வகிப்பவர்களாவார்கள்.

தோழர் வேலாயுதம், தோழர் துரைசாமி அவர்கள் இவ்விருவரும் கிராமத்தை எந்த எந்த வழியில் முன்னுக்குக் கொண்டு வரலாம் என்பதைப் பற்றி பலவழிகள் சொன்னார்கள் என்றாலும், நானும் ஒரு வழி சொல்லுகிறேன். அந்த ஒரே வழியின் மூலம்தான் கிராமங்களை முன்னுக்குக் கொண்டு வரலாமே ஒழிய, மற்ற எந்த வழிகளாலும் கிராமங்களை முன்னுக்குக் கொண்டுவர முடியாது என்பது என் அபிப்பிராயம்.

அந்த வழி என்னவென்றால், நாட்டில் கிராமங்களே இல்லாமல் செய்து விடுவதுதான். ஏனெனில், கிராமம் என்பது ஒருவித

வருணாசிரம தர்ம முறையில் கீழான ஜாதிக்கு சமமாய் இருப்பது. மேல்ஜாதியானுக்கு உழைத்துப்போட வேண்டியது எப்படி கீழ் ஜாதியானின் கடமையாக இருந்து வருகின்றதோ, அதாவது கீழ்ஜாதியான் ஒப்புக்கொண்டாலும், ஒப்புக்கொள்ளாவிட்டாலும் ஜாதிமுறையில் கட்டுப்பட்டு இருப்பதின் காரணமாகவே எப்படி கீழ்ஜாதியான் என்பவன் உழைப்பவனாகவும், மேல் ஜாதியான் என்பவன் அவ்வுழைப்பை அனுபவிப்பவனாகவும் தானாகவே இருந்துவர முடிகின்றதோ, அதுபோலவே பட்டணங்கள் மேல் ஜாதியாகவும், கிராமங்கள் கீழ்ஜாதியாகவும் இருந்துவருகின்றன. எப்படி கீழ் ஜாதிக்காக எவ்வளவுதான் பாடுபட்டு அவர்கள் முன்னேற்றத்துக்காக நாம் எவ்வளவுதான் உழைத்தாலும், அவர்கள் அடியோடு ஜாதி மதத்தை விட்டுவிட்டு வேறு மதத்திற்குப் போய்விட்டால் ஒழிய, அவர்களது கீழ் ஜாதித்தன்மை ஒழிவதில்லையோ, அதுபோல் மேல்ஜாதித்தன்மையும் ஒழிவதில்லையோ அதுபோலவேதான் கிராமங்கள் அடியோடு ஒழிந்து கிராமவாசி என்கின்ற மதம் மாறி பட்டணவாசி, நகரவாசி என்கின்ற மதக்காரன் ஆனால் ஒழிய, கிராமவாசி கஷ்டம் ஒழியப்போவதில்லை.

ஆதலால், கிராம அதிகாரிகளும், ஆரம்ப ஆசிரியர்களும் கிராம முன்னேற்றம் என்னும் துறையில் ஏதாவது உழைக்க வேண்டும் என்கின்ற ஆசை இருந்தால் அவர்கள் கிராம ஜனங்களையெல்லாம் நயத்திலோ, பயத்திலோ பட்டணங்கள், நகரங்கள் ஆகியவைகளுக்குத் துரத்திவிடுவதேயாகும்.

கிராம முன்னேற்றம் என்றால் என்ன? கிராம ஜனங்களுடைய முன்னேற்றம் என்பதேயாகும். கிராம ஜனங்கள் முன்னேற்றம் என்றால் என்ன? கிராம ஜனங்களுடைய சவுக்கியமேயாகும்.

கிராம ஜனங்களுடைய சவுக்கியம் என்றால் என்ன? கிராம ஜனங்கள் பட்டணத்தில் உள்ள ஜனங்கள் அடைகின்ற சவுகரியங்களையும், சுகங்களையும் அடையவேண்டும் என்பதாகவே ஆக வேண்டும் அல்லவா?

அப்படிக்கில்லாமல் கிராமத்துக்கு இட்டேரி போட்டு ஒரு கிணறு வெட்டிக்கொடுத்து, ஒரு பள்ளிக்கூடம் கட்டிவைத்து கம்பு இப்படி விதைக்கிறது, சோளம் இப்படி அறுக்கிறது, விறகு இப்படி உடைக்கிறது, ஆடு-மாடு இப்படி மேய்க்கிறது, பால்-வெண்ணெய் இப்படி எடுத்து நகரத்துக்காரனுக்கு கொண்டுவந்து கொடுத்துவிட்டு போவது, சாணி

இப்படி சேகரம் செய்வது, எருமுட்டை இப்படித் தட்டுவது, ஏர் இப்படி உழுவது, களை இப்படி எடுப்பது, தண்ணீர் இப்படிப் பாய்ச்சுவது, இப்படி அறுப்பது, அறுத்து பட்டணத்தானுக்கு இப்படிக் கொண்டுவந்து சேர்ப்பது என்பன முதலியவைகளை கிராம மக்களுக்குச் சொல்லிக் கொடுத்தால் போதுமா?

அதுபோலவே கைத்தொழில் விஷயத்திலும் இப்படிப் பஞ்சு அரைப்பது, இப்படிப் பஞ்சு கொட்டுவது, இப்படி ராட்டினத்தில் நூல் நூற்பது, இப்படி நூல் கொண்டுவந்து பட்டணத்தில் விற்றுவிட்டு உப்பு, மிளகாய், கடுகு, மிளகு, சீரகம் வாங்கிக்கொண்டு போவது என்பன போன்றவை சொல்லிக் கொடுத்தால் போதுமா?

இவற்றால் எல்லாம் கிராமவாசி சினிமா பார்க்க முடியுமா? நல்ல துணிமணி, மேல்சட்டை போட முடியுமா? பார்க்கில் உலாவ முடியுமா? அவன் பெண்டு, பிள்ளை S.S.L.C. இல்லா விட்டாலும் தாய் பாஷையில் கையெழுத்துப் போடவாவது கற்றுக்கொள்ள முடியுமா? அல்லது கிராமவாசிகளுக்கு இந்த உரிமை, மனுவோ "கடவுளோ" பிறவியிலேயே கொடுக்கவில்லையா? சூத்திரன், முதல் மூன்று வருணத்தானுக்கு உழைக்கவே பிறந்தான். சூத்திரன் பணம் வைத்துக்கொண்டிருந்தால் பலாத்காரமாய் மேல்ஜாதிக்காரன் பிடுங்கிக் கொள்ளலாம் என்கின்ற **மனுதர்ம சாஸ்திரம்போல்,** கிராமவாசி பட்டணவாசிக்கு உழைத்துப் போடவே பிறந்தான், கிராமவாசி பணம் வைத்துக் கொண்டிருந்தால், வக்கீலும், வியாபாரியும், லேவாதேவிக் காரனும் "கழுத்தைத் திருகி" பிடுங்கிக் கொள்ளலாம் என்று ஏதாவது, கினு சாஸ்திரம் இருக்கிறதா?

கிராமவாசியை மனிதன் என்று இன்று யாராவது மதிக்கிறார்களா? அவர்களின் வாழ்க்கை மிருக வாழ்க்கையை விட வேறு வழியில் மாற்றம் இருக்கிறதா?

இன்று இந்தியாவில் 100க்கு 8 பேர் படித்து இருக்கிறார்கள் என்றால், அந்த 8 பேர் யார்? கிராமவாசிகளுள்படவா விகிதாசாரம்? அவர்களிலும் 100க்கு 8 பேர் படித்து இருக்கிறார்களா? மேல்ஜாதிக்காரர்கள் 100க்கு 100 பேர், பட்டணவாசிகள் 100க்கு 50 அல்லது 60 பேர் ஆக இந்தக் கூட்டத்தாரின் எண்ணிக்கைப் பெருக்கத்தால்தான் எல்லா மக்களுக்கும் இந்தியாவில், 100க்கு 8 வீதம் கணக்கு ஆகிறதே தவிர, கிராமவாசிகள் 100க்கு 2, 3 பேர் கூட படித்து இருக்கவில்லை.

ஒரு கிராமம் என்றால் ஒரு பணக்காரன் ஆதிக்கமும், மற்ற மக்களை அவன் அடக்கி ஆளுவதும், அந்த பணக்காரன் பட்டணத்தான்களுக்கு அடிமையாகி மற்ற கிராம ஜனங்களை அரித்துக் கொண்டு வந்து கொடுப்பதும் என்பதல்லாமல் வேறு என்ன நிலையில் கிராமம் இருக்கிறது என்று பாருங்கள்.

கிராமநிலை குப்பை மேடு, கக்கூஸ், ஜலதாரை நாற்றம், தரித்திரக் குச்சுகள், நோய் உருவங்கள், முட்டாள்தனமும், மூடநம்பிக்கையும் தாண்டவம் என்பவை போன்றவை அல்லாமல், வேறு என்ன காணமுடிகின்றது என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். நமது நாட்டில் வரிகள் முழுவதும் கிராமவாசிகள் உழைப்பையே அஸ்திவாரமாய்க் கொண்டதாகும். அவர்களை நாம் மனுஷ வர்க்கத்தில் சேர்ப்பதில்லை. ஆனால், அவர்களுக்காகவே பாடுபடுகிறோம் என்று வேஷம் போட்டு, நாம் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளுகிறோம். நமது சுயராஜ்ஜியத்தாலோ, நமது பூரண சுயேச்சையாலோ, சமுக முன்னேற்றத் தாலோ, ராமராஜ்ஜியத்தாலோ கிராமவாசிகளுக்கு ஏற்படும் நன்மை என்ன? இதுவரை ஏற்பட்டதென்ன? என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். இந்திய காங்கிரஸ் சர்வாதிகாரியான அல்லது சூத்திரதாரியான தோழர் காந்தியாரின் கிராம முன்னேற்றத் திட்டம் என்ன என்று பாருங்கள்.

“கிராமவாசிகள் பெட்டிகளில் வெள்ளி நாணயம் இருக்கக்கூடாது” என்று காந்தியார் பலதடவை சொல்லி இருக்கிறார். நெல்லுக் குத்தவேண்டும், கருப்பட்டி காய்ச்ச வேண்டும், ராட்டினம் நூற்கவேண்டும் என்பது போன்ற திட்டங்கள் மூலம் 1000 வருஷத்துக்கு முன்னால் இருந்த உலகத்துக்குப் போகச் சொல்லுகிறார். இதனால் கிராமம்தான் ஆகட்டும், கிராமவாசிதான் ஆகட்டும், எப்படி முன்னுக்கு வரமுடியும்? என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். நகரத்தில், பட்டணத்தில் இருக்கிற ஒரு தொழிலாளிக்கோ, வீதி கூட்டுபவனுக்கோ உள்ள சவுகரியம், அனுபவம் கிராமாந்தர மிராசுதாரனுக்கு இல்லை என்றால் நீங்கள் நம்பவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இயந்திரசாலைத் தொழிலாளிகளைப் பற்றி பிரமாதமாகப் பேசுகிறோம்; அவர்கள் நன்மையே உலக நன்மை என்று பிரச்சாரம் செய்கிறோம். அவர்களாலேயே உலகம் இருக்கிறது என்று சொல்லுகின்றோம். யந்திரசாலைத் தொழிலாளிகளின் உழைப்பைவிட கிராமவாசிகள்

உழைப்பு கொஞ்சமானதா? அல்லது யந்திரசாலைத் தொழிலாளிகளால் நாட்டுக்கு ஏற்படுகின்ற நன்மையைவிட கிராமவாசிகளால் ஏற்படும் நன்மை குறைந்ததா? என்று யோசித்துப்பாருங்கள். ஆனால், அவர்கள் நிலைமையையும், கிராமவாசிகளின் நிலைமையையும் சிறிது ஒப்பிட்டுப் பாருங்கள், கிராமவாசிகள் நிலை எவ்வளவு பரிதாபகரமானது என்று பாருங்கள்.

என்றாலும், ஒரு விஷயத்தில் நான் நம்பிக்கையும், மகிழ்ச்சியும் அடைகிறேன். என்னுடைய ஆசை தானாகவே நிறைவேறி வருகிறது. அதாவது கிராமங்கள் தானாகவே அழிந்து வருகின்றன. கிராம ஜனங்கள் பட்டணங்களுக்குத் தானாகவே குடி ஏறி வருகிறார்கள். இந்த 25 வருஷத்தில் பழைய கிராமங்கள் ஒன்றுக்கு பகுதி ஆகிவிட்டன. பட்டணங்கள் ஒன்றுக்கு ஒன்றரை, இரண்டு பங்குகூட ஜனப்பெருக்கம் ஆகி பெருத்துவிட்டன. உதாரணமாக, இந்த ஈரோட்டை எடுத்துக் கொள்ளுங்கள். 1910இல் பதினாறாயிரம் ஜனங்கள் ஈரோட்டில் இருந்தார்கள். 1920இல் 22 ஆயிரம் ஜனங்கள் ஆனார்கள். 1930இல் 34 ஆயிரம் ஜனங்கள் ஆனார்கள். 1936இல் இப்போது கிட்டத்தட்ட நாற்பதாயிரம் ஜனங்கள் ஆகி இருப்பார்கள்.

இதுபோலவே நமது ஜில்லாவிலேயே கோயமுத்தூர், திருப்பூர், பொள்ளாச்சி முதலிய நகரங்கள் இரட்டிப்பு ஆகிவருகின்றன. இந்த ஜனங்கள் எங்கிருந்து உற்பத்தி ஆனார்கள்? சொல்லுங்கள் பார்க்கலாம். கிராமங்கள் காலி ஆகிவருகின்றன. கிராம ஜனங்களுக்கு பட்டண வாசத்தில் மையல் ஏற்பட்டுவிட்டது. இனி அதைத் தடுக்க யாராலும் ஆகாது என்பதை மனதில் வையுங்கள்.

ஒரு சமூகம் முன்னேற்றம் அடைந்தது என்றால் அந்தச் சமூகத்தில் எப்படி கீழ்ஜாதி, ஈன ஜாதி மக்கள் என்பவர்கள் இருக்கக்கூடாதோ, அதுபோலவே ஒரு நாடு முன்னேற்றம் அடைந்தது என்றால் அந்த நாட்டில் கிராமங்கள், பட்டிகள், தொட்டிகள் இருக்கக்கூடாது என்பது என் கருத்து. நாடெல்லாமே நகரங்களாய் இருக்க வேண்டும். சூரியன், சந்திரன், தென்றல் எப்படி எல்லோருக்கும் பொதுவோ, அப்படியே பொதுவாழ்க்கை போக்கியங்கள் எல்லோருக்கும் பொதுவாய் இருக்கவேண்டும்; "பட்டணத்தில் இருப்பதால் மாத்திரம்தான் அனுபவிக்க முடிகின்றது; கிராமத்தில் இருப்பதால் அனுபவிக்க முடிகிறதில்லை" என்கின்ற நிபந்தனை இருக்கக்கூடாது.

சமதர்மம் ஓங்கும் நாடுகளில் கிராமம் என்பதாக ஒன்று இல்லை. வேண்டுமானால் ஒரு நகரத்தில் 25 லட்சம் பேர் இருக்கலாம், மற்றொரு நகரத்தில் 250 பேர் இருக்கலாம். பாடும், அனுபவமும் இருவருக்கும் ஒரே மாதிரிதான். இந்த சவுகரியம் செய்ய பொது உடைமையோ, சமதர்மமோ, சட்ட மறுப்போ, ஒத்துழையாமையோ, பூரண சுயேச்சையோ தேவையில்லை; ஜனப்பிரதிநிதிகள், ஜனத்தலைவர்கள் யோக்கியர்களாக இருந்தால் போதும். அவர் அப்படி இல்லாவிட்டாலும் ஆரம்ப ஆசிரியர்களும், கிராம அதிகாரிகளுமாவது இந்த வேலை செய்தால் போதும். நீங்கள் ஒருவரும் செய்யாவிட்டாலும் இயற்கை செய்யப் போகிறது; செய்து கொண்டு இருக்கிறது. அதைத் தடுக்காமல் இருந்தாலும் போதும்.

**சமதர்மம் ஓங்கும் நாடுகளில் கிராமம் என்பதாக ஒன்று இல்லை. வேண்டுமானால் ஒரு நகரத்தில் 25 லட்சம் பேர் இருக்கலாம், மற்றொரு நகரத்தில் 250 பேர் இருக்கலாம். பாடும், அனுபவமும் இருவருக்கும் ஒரே மாதிரிதான். இந்த சவுகரியம் செய்ய பொது உடைமையோ, சமதர்மமோ, சட்ட மறுப்போ, ஒத்துழையாமையோ, பூரண சுயேச்சையோ தேவையில்லை; ஜனப்பிரதிநிதிகள், ஜனத்தலைவர்கள் யோக்கியர் களாக இருந்தால் போதும்.**

கல்வியைப் பற்றி தோழர் துரைசாமி பிள்ளை அவர்கள் பேசினதைக் கேட்டீர்கள். நமது நாட்டு கல்விக்கு லட்சியமே இல்லை. நமது வாழ்வுக்கே லட்சியமில்லை என்பதோடு சுயநலப் போட்டியும், பேராசையுமே ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் அடிமைப்படுத்திக் கொண்டிருக்கிறது என்றால் கல்விக்கு என்ன லட்சியம் இருக்கப் போகிறது? என்ன படிப்பது? எதற்கு ஆகப் படிப்பது? என்பதை எத்தனை பண்டிதர்கள் கல்வியில் பெரிய பட்டம் பெற்ற மேதாவிகள் உணர்ந்திருக்கிறார்கள்?

ஏதோ படிப்பது, என்னமோ வாய்ப்பது, வாய்த்ததை பிடித்துக் கொண்டு சப்புச் சப்பென்று சப்பி அதன் உயிரை வாங்கி கடைசியில் “ஓய்வு” எடுத்துச் சாவது என்பதல்லாமல் இன்றைய கல்விக்கு என்ன லட்சியமோ, மரியாதையோ, பயனோ இருக்கிறது என்று யோசித்துப் பாருங்கள்.

எல்லா மக்களுக்கும் கல்வி பரவுவது நம் நாட்டில் பொது உடைமைக் கொள்கை பரப்புவது போன்ற அவ்வளவு கஷ்டமான காரியமாய் இருக்கிறது.

"எல்லோருக்கும் உள்ள சொத்துகளைச் சரியாய் பங்கு போட்டுவிட்டால், அப்புறம் பணக்காரன் - ஏழை இருக்கமாட்டானே, உலகம் ஒழுங்காய் நடவாதே" என்று சொல்லுகின்ற வாதம்தான் இன்று கல்விக்கும் ரகசியத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது. ஏனென்றால், "எல்லாரும் படித்துவிட்டால் பிறகு முட்டாள் யார், புத்திசாலி யார் என்கின்ற பேதமே இல்லாமல் போய்விடுமே, படித்தால் பாடுபடாமல் வாழ்க்கை நடத்தும் சவுகரியம் போய்விடுமே" என்று கருதியே கல்வியை இந்த நாட்டில் இவ்வளவு மோசமாக்கி விட்டார்கள். மேல்நாடுகளில் கல்விக்கு இப்படிப்பட்ட நிர்ப்பந்தம் கிடையாது; யாவருக்கும் ஓர் அளவு கல்வி சுதந்திரமாய், நிர்ப்பந்தமாய் வினியோகிக்கப்படுகிறது.

மற்றும் இங்கு, கல்வி பிழைப்புக்கு வழியே தவிர, அறிவுக்கு வழியல்ல என்கின்ற தன்மையில் வந்துவிட்டதால் கல்வி இவ்வளவு பூஜ்ஜியமாகப் போய்விட்டது. ஆதலால், எல்லா மக்களுக்கும் கல்வி பரவ வேண்டுமானால் கிராமங்களை ஒழித்தாலே போதுமானது. பட்டண வாழ்க்கையே ஒரு விதமான கல்வி ஸ்தாபனம் என்று சொல்லலாம். கிராம வாழ்க்கையே ஒரு விதமான மவுடீக ஸ்தாபனம் என்றும் சொல்லலாம்.

பட்டண வாசம் அறியாமையைப் போக்குவது மாத்திரமல்லாமல், ஏழ்மையையும் போக்கும், நோயையும் கூடப் போக்கும் என்று சொல்லலாம்.

ஆகவே, மக்களின் இன்றைய பெருவாரியான குறைகளுக்குக் கிராமவாசம் ஒரு காரணமாகும் என்பதை நன்றாய் ஞாபகத்தில் வையுங்கள். தோழர்களே! முடிக்கப் போகிறேன். கிராம அதிகாரிகளுக்குப் பரிட்சை என்று இம்மாதிரி ஒரு ஸ்தாபனம் வைத்து பயிற்சி கொடுத்து வருவது மிகவும் பாராட்டத்தக்கதும், பயன்படத் தக்கதுமான காரியம். இதைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

கிராம அதிகாரிகளும், உபாத்தியாயர்களும் அரசியலில் சம்பந்தப்படாதீர்கள். உங்களுக்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லை.

உங்களுக்குக் கஷ்டம் வந்தால் சர்க்கார்தான் காப்பாற்ற வேண்டும். அவர்கள் தயவிலேயே இருக்க வேண்டியவர்களாவீர்கள். நீங்கள் ஓர் அளவுக்கு சர்க்கார் உத்தியோகஸ்தர்களே ஆவீர்கள். சில கிராமாதிகாரிகள் என் பேச்சைக் கேட்டு அரசியலில் தலையிட்டு, வேலை போய் உள்ளூரில் போட்டி ஏற்பட்டு 4000, 5000 செலவு செய்து நியூ ஜெண்ட்கிராண்ட் வைத்து மன்னிப்பு எழுதிக் கொடுத்து தப்பவேண்டியதாயிற்று. உங்களுக்கு கோர்ட்டோ, விசாரணையோ ஒன்றும் கிடையாது. மேல் அதிகாரிகளின் இஷ்டம்தான். ஆகையால் நீங்கள் கிராம அதிகாரிகளாகவோ, உபாத்தியாயர்களாகவோ இருக்கும் வரை உங்கள் வேலைகளைக் காப்பாற்றிக் கொள்ளுவதில் கவலையாயிருங்கள். உங்கள் ஒப்பந்தம் எஜமானுக்குக் கீழ்ப்படிந் திருப்பதுதான். அந்த ஒப்பந்தத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதில் உங்கள் உத்தியோகத்தின் பெரும் பகுதியைச் செலுத்துங்கள்.

**மக்களின் இன்றைய பெருவாரியான குறைகளுக்குக் கிராமவாசம் ஒரு காரணமாகும் என்பதை நன்றாய் ஞாபகத்தில் வையுங்கள்.**

ஒரு போலீசுக்காரனுக்கு ஒரு சூப்பிரண்டு ஒருவனை தடியால் அடிக்கும்படி உத்தரவு செய்தால் அந்த போலீசுக்காரன் அடிப்பது நியாயமா, அநியாயமா? அது "தேசியமா", "பரதேசியமா" என்று யோசிக்கலாமா? யோசித்தால் நாணயத்தையும், கடமையையும் செய்ததாகுமா? ஒப்பந்தப்படி நடக்க வேண்டாமா? அதுபோல் தான் உங்கள் நிலையும் என்பதை எப்போதும் மனதிலிருத்துங்கள்.

மற்றுமொருமுறை என்னை நீங்கள் தலைவராகத் தெரிந்தெடுத்தற்கு நன்றி செலுத்திவிட்டு, நான் சொன்னவை என்னுடைய அபிப்பிராயங்கள், அதை நீங்கள் நன்றாக ஆலோசித்துப் பார்த்து தள்ளுவதைத் தைரியமாய்த் தள்ளி, கொள்ளுவது உண்டானால் உங்கள் சவுகரியம், சந்தர்ப்பம் ஆகியவைகளை கவனித்துக் கொள்ளுங்கள்.

(31.10.1936 அன்று ஈரோடு கிராம உத்தியோகஸ்தர் சங்க ஆண்டு விழாவில் "கிராம அதிகாரிகளும் ஆரம்ப ஆசிரியர்களும்" என்பது பற்றி தந்தை பெரியார் ஆற்றிய சொற்பொழிவு)

- 'குடிஅரசு' - சொற்பொழிவு - 22.11.1936

ooo

# கிராமாதிகாரி கடமை

தலைவரவர்களே! தோழர்களே!

இன்று இப்பாடசாலையின் 10ஆம் ஆண்டு ஆரம்ப விழா கூட்டத்தில் என்னைப் பேசும்படி கேட்டுக் கொண்டதற்காக மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் பாடசாலையின் ஆசிரியர் தோழர் சண்முகவேலாயுதம் எந்த வேலையை ஆரம்பித்தாலும் பொறுப்புடன் திறம்பட நடத்துபவர். தயவு தாட்சண்யமின்றி தனக்குச் சரி என்று பட்டதை ஒழுங்குடன் நடத்துபவர். அப்படிப்பட்டவர் நடத்தும் இப்பாடசாலை எப்படி நடந்து வருகிறதென்பதை யோசித்துப் பார்க்க வேண்டியதில்லை. எனக்குமுன் பேசியவர்கள் கிராமாதிகாரிகள் கிராமங்களில் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்றும், கிராமாதிகாரிகளுக்கு சம்பளம் குறைவென்றும் மேலதிகாரிகள் கிராமாதிகாரிகளுக்குக் கொடுக்கும் தொல்லையைப் பற்றியும் பேசினார்கள். கிராமாதிகாரிகளைப் பற்றி இன்று நம்நாட்டிலுள்ள முறையே மாற வேண்டுமென நான் ஆசைப்படுகிறேன்.

### கிராமாதிகாரி முறை மாற்றமடைய வேண்டும்

இன்று கிராமாதிகாரிகளாக உள்ளவர்கள் சம்பளக் குறைவோடும், கவுரவமில்லாததோடும், மேலதிகாரிகள் தொல்லையாலும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இன்றுள்ள கிராமாதிகாரிகளால் கிராமங்களுக்கு என்ன நன்மைகள் ஏற்பட்டு வருகிறது. இன்றுள்ள கிராமாதிகாரிகளில் 100க்கு 10 பேராவது அன்புடையவர்களாகவாவது, பொறுப்புடையவர்களாகவாவது இருக்க முடிகிறதா என்று கேட்கிறேன்.

கிராமாதிகாரிகளால் கிராமங்களுக்கு ஏதாவது நன்மையேற்பட்டு கிராமவாசிகள் சுகமுடன் வாழ வேண்டுமானால் கிராமாதிகாரிகளாக

நியமிக்கப்படுகிறவர்கள் கொஞ்சம் பொறுப்புடையவர்களாயும், திறமைசாலிகளாயும் சம்பளம் அதிகமாகக் கொடுத்தும் நியமிக்கப்பட வேண்டும். குறைந்தது அவர்கள் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் கிரேடுடையவர்களாகவாவது இருக்கவேண்டும். இப்படிச் செய்வதென்றால் சர்க்கார் பணம் போதாதென்று கூறுவார்கள். பணம் போதவில்லையென்றால் வரியை அதிகப்படுத்த வேண்டும். இரண்டு மூன்று கிராமங்களுக்கு ஒரு கிராமாதிகாரியை நியமிக்க வேண்டும். அப்படி நியமித்து அவர்களுக்குத் தகுந்த அதிகாரங்கள் கொடுத்தால் அவர்கள் கிராமங்கள் முன்னேறும்படியான பல வேலை செய்வார்கள்.

### வரி அதிகம் போட வேண்டும்

நான் வரிகளை உயர்த்த வேண்டுமென்று கூறுவதால் பலர் என்னைக் கோபிப்பார்கள். நான் கூறுகிறேன் நல்ல சர்க்காராயிருந்தால் நாம் வரி எவ்வளவு உயர்வாகக் கொடுக்கிறோமோ அவ்வளவு நமக்கு லாபமேற்படும். அதைப்பற்றி பயப்படாமலிருந்தால் பல நன்மைகள் ஏற்படும். நமது நாட்டில் இப்போது வாங்கும் பூமி வரிகள் மிகச் சாதாரணமானதுதான். இந்த வரி அதிகம் என்று கூச்சல் போடுகிறார்களே ஒழிய, வரி "அதிகம்" கொடுத்து அதனால் தக்க பலன் சம்பாதிக்கத் தகுதி செய்து கொள்ளவில்லை.

இன்று ஈரோட்டில் ஒரு ஏக்கரா பூமி 3000 ரூபாய் விலைக்கு விற்கிறது.

அதின் வரும்படி 100க்கு வருடம் 4-8-0, 5 ரூபாய் வீதம் வட்டி கட்டும்படி இருக்கிறது. தஞ்சை ஜில்லாவில் ஓர் ஏக்கரா 500 ரூபாய் விலையாக இருக்கிறது. அப்படி இருந்தும் வரி கட்டுவதற்கு வரும்படி கிடைப்பதில்லை. ஏன் இப்படி! இரண்டு இடத்திலும் ஒரே தண்ணீர் தான் பாய்கிறது. பூமியும் ஒன்றுதான். ஆனால் பூமிவைத்திருக்கிறவனுக்கும் சர்க்காருக்கும் விவசாயம் செய்வதில் பொறுப்பிருப்பதில்லை. தஞ்சை ஜில்லாவிலுள்ள விவசாயிகளுடைய சோம்பலும், சர்க்காருடையும் கவனக் குறைவும் காரணமாகவே விவசாயம் குறைந்து வருகிறது. நமது நாட்டு விவசாயத்தைவிட மேல் நாட்டில் விவசாயம் 4 மடங்கு அதிகமாகிறது. அங்கு சர்க்கார் வேண்டிய முயற்சி எடுத்து, அதற்கு வேண்டிய கவனம் செலுத்துகிறார்கள். அங்கு வரி மிக அதிகமாகக் கொடுக்கிறார்கள். அதனால் சர்க்கார் கவலை எடுத்து அதிக வரும்படி வருவதற்கான முயற்சி செய்து வருகிறார்கள். இங்கு ஏதாவது

ஒரு காரியம் செய்ய வரியை உயர்த்தினால், வரி அதிகமெனக் கூச்சல் போடுகிறோம். பார்ப்பனத் தொல்லையால் வரிகள் எல்லாம் சம்பளமயமாகவும் பொறுப்பற்ற காரியங்களுக்கும் போய்விடுகிறது. இங்கு ஓர் ஆளுக்கு சுமார் 20 ரூ. வரி ஆகலாம். மேல் நாட்டில் ஆள் 1-க்கு 250 ரூ. வரி ஆகலாம். ஆனால் சர்க்காரும் வரி எவ்வளவு அதிகம் வாங்குகிறார்களோ அது மாதிரி அதிகமான லாபம் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

இம்மாதிரி ஆவதற்கு தகுதி வாய்ந்த நல்ல கிராமாதிகாரிகளை நியமிக்க வேண்டும். அப்படி நல்ல கிராமாதிகாரிகள் இல்லாததாலும், கவனக்குறைவுடைய கிராமாதிகாரிகளாக இருந்து வருவதாலும் இன்று கிராமங்களில் மிகுந்த ஒழுக்க ஈனங்களும், நாணயக் குறைவுகளும் ஏற்பட்டு வருகின்றன.

**கிராம - நகர பேதம் கூடாது**

மற்றும் கிராமம் - நகரம் என்கிற பேதத்தை முதலில் ஒழிக்க முயற்சிக்க வேண்டும். அந்த பேதம் கற்பித்து கிராம மக்களை நகரவாசிகள் மிக இழிவாக நடத்தி வருகிறார்கள். நான் கேட்கிறேன். சென்னையைவிட ஈரோடு எந்த விதத்தில் குறைவு உடையது? இதற்கும், அதற்கும் என்ன வித்தியாசமிருந்து வருகிறது? இரண்டும், தன்மையில் ஒன்றாகத்தான் இருக்கிறது. தனி சவுகரியங்கள் மட்டும் தனித்தனியாக இருக்கலாம். அது ஜனத்தொகை, பொருளாதார வசதி இவைகளைப் பொறுத்திருப்பது. இதனால் எப்படி ஒன்று மேலாகவும், ஒன்று தாழ்வாகவுமிருக்க முடியும்? அப்படி இழிவாக எண்ணுவதை ஒழிக்க வேண்டும். கிராமங்களையெல்லாம் ஒழித்து நகரமாக்க வேண்டும், நகர மக்களைப்போல் கிராம மக்களையும் சுகமனுபவிக்கச் செய்ய வேண்டும். அவர்களுக்குள்ள சவுகரியங்கள் அனைத்தையும் இவர்களும் அனுபவிக்கச் செய்ய வேண்டும். குறைந்த வீடுகளுள்ள கிராமங்கள் இரண்டு மூன்றை ஒன்று சேர்த்து நகரம்போல் செய்ய வேண்டும். நகரம்போலவே வரிகள் விதித்து பல திட்டங்கள் வகுத்து பல சவுகரியங்கள் அனுபவிக்க வழி செய்ய வேண்டும். இது செய்யாமல் கிராமங்களைச் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று கூறி வருவதால் ஒருவித பயனும் ஏற்பட்டுவிடாது. நான் இன்னும் கூறுவேன் - “கிராமச் சீர்திருத்தம்” என்று சொல்லும் வார்த்தையே சூழ்ச்சியான வார்த்தையென்றே! கிராமச் சீர்திருத்தம் என்ற பேரால் இரண்டு மூன்று பேர் கிராமங்களுக்குச் சென்று வீதி கூட்டி இரண்டொருவருக்கு

அரிவரி எழுத்து படிப்பு சொல்லிக் கொடுத்து விடுவதால் கிராமம் சீர்திருத்தமாகி விடுமா? இதுவெல்லாம் கிராமவாசிகளை ஏமாற்றித் தாழ்மையாக்கி இழிவு செய்வதென்றே நான் கருதுகிறேன். ஹரிஜன முன்னேற்றம் என்பதில் எவ்வளவு பித்தலாட்டம் இருக்கிறதோ அவ்வளவு பித்தலாட்டமிருக்கிறது இந்த கிராமச் சீர்திருத்தத்தில்.

**கிராமச் சீர்திருத்தம் என்ற பேரால் இரண்டு மூன்று பேர் கிராமங்களுக்குச் சென்று வீதி கூட்டி இரண்டொருவருக்கு அரிவரி எழுத்து படிப்பு சொல்லிக் கொடுத்து விடுவதால் கிராமம் சீர்திருத்தமாகி விடுமா?**

### கிராம விவசாயியைவிட நகர கூலிக்காரன் மேல்

கிராமத்திலுள்ள பெரிய விவசாயியைவிட நகரத்திலுள்ள ஒரு தாழ்ந்த கூலிக்காரன் மேலாகவே மதிக்கப்படுகிறான். உதாரணமாக காங்கய நாட்டிலிருந்து ஈரோட்டிற்கு விரட்டி அடிக்கப்பட்டு ஓடி வந்து கைவண்டியோ மண் வண்டியோ தட்டி பிழைக்கும் ஒரு கூலிக்காரனைவிட அந்த காங்கய நாட்டில் 4 வள்ளம், 5 வள்ளம் புஞ்சை நிலம் (ஒரு வள்ளம் – 4 ஏக்கரா பூமி) வரும்படி பெறக்கூடிய ஒரு விவசாயி தாழ்வாகவே வாழுகிறான். அது போலவே கிராமத்தில் உள்ளவர்களுக்கு நகரத்திலுள்ளவர்கள் பெண் கொடுக்கவே சம்மதிப்பதில்லை. கிராமத்திலுள்ள மணமகன் நல்லவராகவும், வசதி உடையவராகவும் இருந்தாலும் “என்ன பணமிருந்தாலும் அந்தப் பட்டிக்காட்டுக்கு என் மகளைக் கொடுக்க மாட்டேன். எவ்வளவு ஏழையாக இருந்தாலும் நகரத்தில் இருப்பவனுக்குத்தான் கொடுப்பேன்” என்று கூறுகிறான். இதிலிருந்து எவ்வளவு இழிவாக கிராமத்தை மதிக்கிறார்களென்பதை சற்று கவனிக்க வேண்டுகிறேன்.

### மேல்நாட்டில் இப்படியில்லை

இந்த வித்தியாசங்கள் மேல் நாட்டிலில்லை. ஜனத்தொகைக்குத் தகுந்தபடி சில சவுகரியங்களில் மாற்றங்களுண்டே ஒழிய, இவ்வித வித்தியாசங்களிருக்காது. அங்கு கிராமங்களையெல்லாம் டவுனாக்குகிறார்கள். அங்குள்ள சர்க்கார் கிராமங்கள்மீது அக்கறை எடுக்கிறார்கள். அங்கு அதிகாரிகளுக்குள்ளும் வித்தியாசமிருக்காது. அங்கு மக்களுக்கு அதிகாரிகள் செய்ய வேண்டிய வேலைகளை ஒழுங்காகச் செய்வார்கள். அங்குள்ள அதிகாரிகளுக்கு மிகுந்த

கவுரவமும், போதிய சம்பளமும் உண்டு. இங்கோ அதிகாரிகள் தன்மானம் மிக இழிவாகவும், கேவலமாகவும் நினைக்கும்படி இருக்கிறது. அதுவும் கிராமாதிகாரிகள் படிப்பின்மையால் மேலதிகாரிகளிடம் தொல்லை படுகிறார்கள். இந்த மாதிரி தொல்லைகள் மாற வேண்டுமென்றே நான் நினைக்கிறேன்.

**கிராமச் சீர்திருத்தம் - ஒரு வர்ணாசிரம முறை**

மற்றும், கிராமம் – நகரம் என்று பிரித்துக் காட்டுவதே வருணாசிரம முறைப்படியே தான். சமதர்மம் பேசும் காங்கிரஸ்காரர்களே கிராமம் – நகரம் என்ற பிரிவினை இருக்க வேண்டுமென்று பிரசாரம் செய்துவருகிறார்கள்.

உதாரணமாக தோழர் காந்தியார் சில வருடங்களுக்கு முன் ஒரு சமஸ்தான கிராமவாசிகள் இடையில் கிராமவாசிகளுக்காகப் பேசும்போது கீழ்க்கண்டவாறு பேசியுள்ளார்:

“கிராமவாசிகளாகிய உங்கள் கையில் வெள்ளிக்காசுகளிருக்கக் கூடாது. நகரத்திலுள்ளவர்களுக்கு ஊழியம் செய்யவே உங்களை கடவுள் படைத்திருக்கிறார். ஆதலால், நகரத்திலுள்ள மக்கள் சவுகரியமாக வாழும்படி அவர்களுக்கு பால், நெய், காய்கறி, செருப்பு ஆகியவைகள் தயார் செய்யும் ஊழியம் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்” எனப் பேசியுள்ளார். இதைப் பின்பற்றியே பல காங்கிரஸ்காரர்கள் பேசிவருகிறார்கள். இதிலிருந்து காங்கிரஸ்காரர்கள் கிராமவாசிகளைப் பற்றி மனதில் என்ன நினைத்திருக்கிறார்கள் என்பதைச் சற்று சிந்திக்க வேண்டுகிறேன்.

கிராமம் – நகரம் என்ற வித்தியாசம் தொழில் முறையாலும் விளையாட்டு முறையாலும் இருக்கிறது. இம்முறையை மாற்ற வேண்டும். இந்த முயற்சியை சர்க்காரே எடுக்க வேண்டும். இதற்காகப் பணமில்லையென்று கருத வேண்டாம்.

அதற்கு வழி செய்யலாம். திருவிழாக்களால் ஒரு கிராமத்தில் எவ்வளவு செலவாகி வருகிறது. வக்கீல்களுக்கும் பார்ப்பனர்களுக்கும் கிராமத்தார் எவ்வளவு அழுகிறார்கள்? என்பதைக் கவனிக்க வேண்டும். அதனால் எவ்வளவு சுகாதாரக் கேடுகள் ஒழுக்கக் கேடுகள் மக்களுக்குப் பண விரயங்கள் ஏற்படுகிறதென்பதைக் கவனிக்க வேண்டும். அவைகளைப் போக்க சர்க்கார் வழி செய்ய

வேண்டும். உதாரணமாகக் கோட்டை மாரியம்மன் திருவிழாவை எடுத்துக் கொள்ளுங்கள். அதனால் எவ்வளவு தீமைகளும், பொருள் சேதங்களும் உண்டாகின்றதென்பதை கவனியுங்கள். இதைவிட விவசாயக் கண்காட்சிகளை ஏற்படுத்தி - விவசாயம் செய்யும் விதம் எப்படி, எப்படி, விவசாயம் செய்தால் பலன் முன்னேறும் விவசாயம் பெருகுவதற்கு விவசாயிகள் செய்ய வேண்டிய வேலைகள் ஆகியவைகளைப் பற்றி மக்கள் நன்கு உணருமாறு காட்ட வேண்டும். அதுபோலவே சுகாதாரக் கண்காட்சிகளை ஏற்படுத்த வேண்டும் அந்தக் கண்காட்சி மூலம் கிராம மக்கள் எவ்வாறு சுகாதார முறைப்படி இருக்க வேண்டுமென்பதைப் பற்றியும் திருவிழா முதலிய விஷயங்களில் சுகாதார முறைக்கு விரோதமாக நடப்பதைப் பற்றியும் விளக்க வேண்டும். அதுபோலவே கூட்டுறவு வியாபார முறைகளால் ஏற்படும் நன்மைகளைப் பற்றியும், அந்த முறையல்லாது வியாபாரிகள் ஒழுங்கான முறையில் வியாபாரம் செய்யாது மக்களை ஏமாற்றுவதைப் பற்றியும் மக்களுக்கு எடுத்து விளக்க வேண்டும். தொழில் காட்சி வைத்து இயந்திரத் தொழில் கைத்தொழில் முறைகளை விளக்க வேண்டும். இவைகளை சர்க்காரே செய்ய வேண்டும். இதனால் வரி உயர்ந்தாலும் மக்கள் கவலைப்பட மாட்டார்கள்.

## நமது மக்களுக்கு அன்பு காட்டத் தெரிவதில்லை

நமது நாட்டில் மக்கள் வீண் பெருமைக்கும், பொய் கவுரவத்திற்குமே வாழ்கிறார்கள். அவர்களுக்கு மற்ற மக்களிடத்தில் அன்பு காட்டுவதென்பதே தெரிவதில்லை. எப்பொழுதும் கடிந்து பேசும் பழக்கமே பழகி வருகிறோம். உதாரணமாக, அயல் ஊர்காரன் நமது நாட்டுக்கு வந்து வழி தெரியாது தவித்து ஏதாவது கேட்டால் அன்போடு பதில் கூறுவது கிடையாது.

ஆனால், மேல்நாட்டில் உள்ள ஆண், பெண்களிடம் அன்பே உருவாகி இருக்கும். அது அவர்கள் பழக்க முறையேயாகும். அவர்கள் நாட்டுக்குப் புதுமனிதர் ஒருவர் சென்று ஒரு தெருவில் நின்றிருந்தால் அந்தத் தெருவில் போகிறவர் வருகிறவர் அந்த மனிதரிடம் வந்து “அய்யா நான் ஏதாவது தங்களுக்கு உதவி செய்ய வேண்டுமா? தாங்கள் எங்காவது போவதற்கு வழி தெரியாது தவிக்கிறீர்களா? எங்கு போக வேண்டும்?” என்றெல்லாம் அன்புடன் கேட்பார்கள். நாம் வழி தெரியாது தவிப்பதாகத் தெரிந்து கொண்டார்களானால் அந்தத் தெருப்பக்கம் யாராவது போகிறவர்களை விசாரித்து அனுப்புவார்கள்.

இன்றேல் கூடவந்து அந்த வழிகாட்டி விட்டுப் போவார்கள். இம்மாதிரி காரியங்களைத்தான் கிராமாதிகாரிகள் செய்ய வேண்டும். இந்த மாதிரி காரியங்களுக்கு மதமும் காரணமாக இருக்கிறது. அவைகளையும் இங்கு மாற்ற வேண்டும். இது கிராமங்கள் மாறுவதால் தான் மாற முடியும். அதற்காகவே கூறுகிறேன் - ஒழுக்கமும், நாணயமும் பெருந்தன்மையும், படிப்பும் பொது அறிவும் உடையவர்களை கிராம அதிகாரிகளாக நல்ல சம்பளத்துடன் நியமிக்க வேண்டும் என்று.

இங்கு பரம்பரையைப் பற்றி எனக்குமுன் பேசியவர்கள் பேசினார்கள். அதைப்பற்றி நான் ஒன்றும் கூற ஆசைப்படவில்லை. ஆனால், அதன்படி பார்ப்பதில் யோக்கியர்களும், படிப்புள்ளவர்களும், அறிவாளிகளும் புகுவதற்கு வழியில்லாது போய்விடக்கூடாது. அயோக்கியர்களும் நாணயமில்லாதவர்களும் அறிவில்லாதவர்களும் ஒழுக்கம் இல்லாதவர்களும் புக ஏதுவுண்டாகக் கூடாது. ஆதலால், எனக்குத் தோன்றிய அபிப்பிராயம் கிராம அதிகாரிகளாக வருபவர்கள் தகுந்த அறிவுள்ளவர்களாகவும் பொது நோக்கமுடையவர்களாகவும் நியமிக்கப்பட வேண்டுமென்பதேயாகும்.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் காங்கிரஸ் கட்சியில் சேராமலிருந்த காலத்தில் மந்திரியாக இருக்கும்போது கிராம முன்னேற்றத் திட்டங்கள் வகுத்து அதைச் சட்டமாக்கி கிராமங்களில் பிரசாரஞ் செய்ய முயற்சிகள் செய்தார். அது நல்ல முறையில் இருந்தது. அதை அப்பொழுது காங்கிரஸ்காரர்கள் எதிர்த்தார்கள். பின் அது கைநழுவ விடப்பட்டது. இனிமேலாவது சர்க்கார் கிராம மக்கள் முன்னேறுவதற்கான திட்டங்களைச் சட்டமாக்கி, அதற்குத் தகுந்தபடி கிராமாதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்க முயற்சிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பாடசாலை இங்கு பயிலும் மாணவர்களுக்கு நல்ல பொது நோக்கான வழிகளைப் பிரச்சாரம் செய்து மக்களுக்கு நன்மை உண்டாகும் முறையில் பயிற்சியளித்து மேன்மேலும் வளர்ந்து வர ஆசைப்படுகிறேன்.

**(18.09.1940 அன்று ஈரோடு சுயமரியாதைச் சங்க கட்டடத்தில்**
**போதனா முறை பாடசாலை ஆரம்ப விழா கூட்டத்தில்**
**பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு)**
**- 'குடிஅரசு' - சொற்பொழிவு, 22.09.1940**

○○○

# கிராமச் சீர்திருத்தமும் எதிர்காலத் திட்டமும்

தலைவர் அவர்களே! தோழர்களே! இந்தக் கூட்டம் கிராமாதிகாரிகள் ஆவதற்குப் பயிற்சி பெறும் மாணவர்கள் கூட்டமானாலும், இதற்குத் தலைமை வகிப்பவர் ஒரு கல்வி அதிகாரி ஆவார்; இங்கு அருகில் வீற்றிருப்பவர் கிராமாதிகாரிகட்கு அதிகாரியாக இருக்கும் "டெப்டி கலெக்டர்" ஆவார். இருவரும் தக்க அதிகாரமும், பொறுப்பும் பெற்ற அதிகாரிகள். அரசியல்வாதியும், பொதுமக்களின் வெறுப்பைப் பெற்ற சமுதாயப் "புரட்சிக்காரனும்", சகல துறையிலும் இந்நாட்டில் செல்வாக்குப் பெற்றிருக்கும் மேல் ஜாதிக்காரர்களால் தங்கள் சமுதாயத்திற்கே எதிரி என்று எண்ணும்படியான விரோதியுமாவேன் நான்.

இந்த இலட்சணத்தில் நான் பழமை, வழமை, பெரியோர் கருத்து, சாஸ்திரம், ஆதாரம் என்பவைகளைக் கண்மூடிப் பின்பற்றாத ஒரு பகுத்தறிவுவாதி என்று சொல்லப்படுபவன்; நானும் என்னைப் பொதுவாக ஒரு சீர்திருத்த உணர்ச்சியுள்ளவன் என்று உரிமை பாராட்டிக் கொண்டாலும் என்னுடைய சீர்திருத்தம் என்பதானது பழைய அமைப்பு, மத அடிப்படை என்பவைகளைக் கூட லட்சியம் செய்யாமல் அநேக காரியங்களை அடியோடு அழித்து நிர்மாணிக்க வேண்டும் என்கிற கொள்கையைக் கொண்டவன். இதனால் என்னை நாசவேலைக்காரன் என்று பலர் சொல்லும்படியானவனுமாவேன்.

இந்த நிலையில் இப்படிப்பட்டவர்கள் முன்னிலையில் "கிராமச் சீர்திருத்தம் கிராமத்தின் எதிர்காலத்திட்டம்" என்பதைப்பற்றிப் பேசுவதென்றால் அது இச்சபைக்கு அவ்வளவு திருப்தியாயும்,

பொருத்தமாகவும் இருக்குமா என்பது கவலைப்படத்தக்கதாக இருக்கிறது. இருந்தாலும் நாடகத்தில் நகைச்சுவை என்பதன் மூலம் எப்படி தலைகீழான - வெறுப்பான பல மாறான கருத்துகளைக் கண்டு உடல் துடிக்காமல் அவைகளைச் சகித்துக் கொண்டு அனுபவிக்கிறோமோ, அதுபோல் நான் சொல்லுவதைச் சற்று கவனமாகக் கேட்டு நகைச்சுவையாய் அனுபவித்து வீட்டுக்குச் சென்று நடுநிலையில் இருந்து ஆலோசித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்கிறேன். ஆத்திரப்படாமல் ஆலோசனையில் இறங்கினால்தான் நல்ல முடிவு கிடைக்கும்.

**கிராமச் சீர்திருத்தம்**

ஆகவே, தோழர்களே! எனது “கிராமச் சீர்திருத்தத் திட்டம்” என்பது என்னவென்றால் நாட்டில் கிராமங்களே எங்கும் இல்லாதபடி அவற்றை ஒழித்து விடுவதேயாகும். அது மாத்திரமல்லாமல் கிராமங்கள் (Villages) என்கின்ற வார்த்தை அகராதியில் இல்லாதபடி செய்துவிடவேண்டும். அரசியலிலும் கூட கிராமம் என்கிற வார்த்தை இருக்கக் கூடாது என்றே சொல்லுவேன். கிராமம் என்கின்ற எண்ணத்தையும், பெயரையும், அதற்கு ஏற்ற பாகுபாட்டையும், பாகுபாட்டு முறையையும் வைத்துக் கொண்டு நீங்கள் என்னதான் கிராமச் சீர்திருத்தம் செய்தாலும் ‘பறையன், சக்கிலி ’ என்பவர்கள், எப்படி ‘அரிஜனன்’ ஆனானோ அது போலவும், ‘ஆதிதிராவிடன் ’ ஆனானோ அது போலவும் போன்ற மாற்றம் தான் ஏற்படுமே ஒழிய, பறையன் மற்ற மனிதர்களைப்போல மனிதனானான் என்கின்ற மாற்றம் எப்படி ஏற்படாதோ அது போல், “கிராமச் சீர்திருத்தம் செய்யப்படுவதால் நல்ல கிராமம் ஆயிற்று” என்றுதான் ஏற்படுமே ஒழிய, மற்றபடியான நகரத்தன்மையையும் நகர மக்கள் அனுபவிக்கும் உரிமையையும் அனுபவிக்க முடியவே முடியாது. ஏனெனில், நகரத்தின் அமைப்பும் அவசியமும் வேறு; கிராமத்தின் அமைப்பும் அவசியமும் வேறு.

எப்படியெனில், கிராமம் என்கின்ற வார்த்தையே இன்று மனித சமுதாயத்தில் எப்படி பிராமணன். சத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்கின்ற வருணாசிரம தர்ம முறையில் பஞ்சமன் இருக்கிறானோ அதுபோல்தான் ஊர்த் தன்மையில் அல்லது ஊர் வரிசையில் பஞ்சமன் நிலையில் கிராமம் இருக்கிறது.

வருணாசிரமத்தின் கருத்து என்ன? ஒருவன் மேல் ஜாதி - ஒருவன் கீழ்ஜாதி - ஒருவன் சரீர பாடுபடாமல் வாழ்வதற்கு இருக்க வேண்டியவன்; ஒருவன் உழைக்க வேண்டியவன். இதைத்தவிர, வருணத்தின் தத்துவம் என்ன?

உதாரணம் என்னவென்றால், "முதல் மூன்று வருணத்தார் வாழ்வுக்காக நாலாவது, அய்ந்தாவது வருணத்தார்களை கடவுள் சிருஷ்டித்தார்." ஆகையால் 4ஆவது 5ஆவது வருணத்தார் முதல் மூன்று வருணத்தார்க்குத் தொண்டு செய்து திருப்தி செய்வதன் மூலம் மோட்சம் அடையவேண்டுமே ஒழிய, நேரே மோட்சத்தை அடையக் கருதக்கூடாது.

"4, 5ஆவது வருணத்தான் பணம், காசு கையில் வைத்திருந்தால் முதல் வருணத்தார் அவற்றைப் பலாத்காரமாய்ப் பிடுங்கிக் கொள்ளலாம்." "முதல் வருணத்தான் படிக்கலாம். 4, 5ஆவது வருணத்தார் படிக்கக்கூடாது; படித்தால் உலகம் நடைபெறாது" என்பது போன்ற மனுதர்ம முறைப்படிதானே அனுபவத்தில் கிராமத்திற்கும், நகரத்திற்கும், வருண முறை ஊர் தர்மம் இருந்து வருகிறது? இது உண்மையா - இல்லையா? என்று யோசித்துப் பாருங்கள்.

## கிராமம் என்றால் என்ன?

கிராமம் என்றால் என்ன? அதில் பள்ளிக்கூடமில்லை, ஆஸ்பத்திரி இல்லை, டிராமா இல்லை, பார்க் இல்லை, நீதி ஸ்தலமில்லை, போலீஸ் காவல் இல்லை, நல்ல ரோடு வசதியில்லை, விளக்கு இல்லை, நல்ல தண்ணீர் என்பது இல்லை, உயர்ந்த நாகரிகம் என்பது இல்லை, பெரும்பாலும் வயிற்றுக்கு ஆகாரம் சம்பாதிப்பதை விட வாழ்வு ஆசைக்குப் பணம் சம்பாதிக்கும் வசதி இல்லை, ஓய்வு இல்லை, புத்தியைச் செலவழித்து முற்போக்கடைய வழியில்லை. இப்படி இன்னும் பல வசதிகள் (நகரத்தானுக்கு இருப்பவைகள்) கிராமத்தானுக்கு இல்லையென்பதல்லாமல் கிராமம் என்றால் வேறு என்ன?

ஆனால் "நகரங்களுக்கு ஆதாரம் கிராமங்கள்தாம்" என்று சொல்லப்படுகிறது. சொல்லுவது மாத்திரமல்லாமல் கிராமத்தாரின் உழைப்பில் ஏற்பட்ட விளை பொருள்களும், உற்பத்திப் பொருள்களுமே நகரத்தார் அனுபவிக்கவும், நகரத்தார் செல்வவான்களாக ஆகவும், அரசாங்கம் நடக்க வரி கொடுக்கவும், அரசாங்கம், நகர மக்கள்

ஆகியவர்கள் மாத்திரமல்லாமல் கடவுள்கள், கோவில்கள்கூட அங்கிருப்பவர்களும் சேர்ந்து தேவஸ்தான சட்டப்படி ஒழுங்காய் சகல இன்பங்களும் அனுபவிக்கவும் வசதியாக இருந்து வருகிறது.

**உதாரணமாக....**

லேவாதேவிக்கு வட்டி கொடுத்து வந்த கிராமங்களான நஞ்சை-புஞ்சை நில வசதிகளுள்ள நீர்ப்பாசனமும், பருவம் தவறாமல் மழைபெய்யும் கொழுத்த நீர்வசதியும் உள்ள நிலப்பரப்புக்கு மத்தியில் உள்ள கிராமங்களின் நிலைகள் எப்படி இருக்கிறது? அவர்களின் வீடு, வாசல் மக்கள் நிலை எப்படி இருக்கிறது? என்பதையும் பொட்டல் காடு, கானல் காடு, பாலைவனங்கள் ஆகியவைகளில் குடியிருக்கும் லேவாதேவித் தொழில்காரர்களான நாட்டுக் கோட்டையார், மார்வாடிகள் ஆகியவர்களின் வீடு எப்படி இருக்கிறது? அவர்கள் வாழ்க்கை நிலைகள் எப்படி இருக்கிறது? என்பதையும் பாருங்கள். இதற்குக் காரணம் என்ன? இது வருணாசிரம முறையா - அல்லவா? யோசித்துப் பாருங்கள். மற்றும் பாடுபட்ட மிராசுதாரர், குடியானவன் ஆகியவர்களின் வீடு எப்படி இருக்கிறது? இவர்களிடம் சரக்கு வாங்கி விற்ற நகர வியாபாரிகள் வீடு, அவர்களது வாழ்வு எப்படி இருக்கிறது? பாருங்கள்.

கிராமத்தானுக்கு கல்வி இல்லாமல் இருந்தால்தானே பயிரிட்டு உழைத்து உழைத்து, அறுத்து மூட்டையாக்கித் தைத்து வண்டியில் போட்டு நகரத்துக்கு அனுப்பிவிட்டு சாவியாய்ப்போன தானியத்தை வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போய், கஞ்சியாகக் காய்ச்சி கலயத்தில் ஊற்றி பிள்ளை குட்டிகளைச் சுற்றி வைத்துக் கொண்டு "இன்று கடவுள் நமக்கு இவ்வளவு கொடுத்தார்" என்று வாழ்த்துப் பாடி எருமை மாடு தவிட்டுத் தண்ணீர் குடிப்பதுபோல் வயிறு முட்டக் குடிக்க முடியும். அதோடு அவன் திருப்தி அடையவும் முடியும்.

அப்படி இல்லாமல் கிராமத்தானுக்கு கல்வி கொடுத்துவிட்டால் "நாம் உழைக்கிறோம், நாம் விளைவித்தோம், நாம் உருப்படி பண்ணினோம், அப்படி இருக்க நாம் கஞ்சி குடிப்பதும், உழைக்காதவன் தரித்துப் புடைத்து ஆக்கிப் படைத்துக் கொண்டு இப்படி தொப்பை வெடிக்க அமுக்குவதா?" என்கின்ற எண்ணம் ஏற்பட்டு விடாதா? அதனால்தான் கிராமம் ஒரு பஞ்சமனுடைய நிலையில் வைக்கப்பட்டு

வருகிறது. இந்த நிலையை நிலைக்க வைக்கக் "கிராமச் சீர்திருத்தம்" என்கின்ற பித்தலாட்டப் பெயரை வைத்துக் கொண்டு ஒரு கூட்டம் அதுவும் வருணாசிரம தர்மத்தில் மேல்படியில் இருப்பவர்கள் சீர்திருத்தக்காரர்களைப் பார்த்து "கிராமத்திற்குச் செல்லுங்கள்" (Go to the villages) என்று வாயில் கத்திக் கொண்டு ஞாயிற்றுக் கிழமை அன்றைக்கு வியாபாரத்துக்கும், வக்கீல் வேலைக்கும் (ஆட்சிக்காரர்களைச் சேர்க்கும் நோக்கத்தோடு) கிராமங்களுக்குச் சென்று, விளக்குமாற்றால் (துடைப்பத்தால்) ஒரு வீதியைக் கூட்டி விட்டு அதற்கொரு பஜனைப் பாட்டைப் பாடி, ஒரு கூடையில் அக்குப்பையை வாரித் தூக்கிக் கொண்டு போய் நத்தத்தில் கொட்டி விட்டு, ஒரு சிறு பிரசங்கம் – இராமாயணத்தில் இராவணக் கொடுமையும், அனுமான் பெருமையைப் பற்றியும் – பேசிவிட்டு வந்து விட்டால் கிராமம் சீர்பட்டு விடுமா? என்று யோசித்துப் பாருங்கள்.

### கிராமம் எதற்கு?

கிராமம் என்று ஒரு குப்பைக் காடு எதற்காக இருக்க வேண்டும்? ஆடு, மாடு, எருமை மேய்ப்பதும், அவைகளைக் காப்பாற்றிப் பால், தயிர், நெய், மோர் உற்பத்தி செய்வது கிராமத்தான்; அவ்வளவையும் அனுபவிப்பது நகரத்தான். இதற்கு என்ன ஆதாரம்? கிராமவாசி கிராமத்தில் இரவு 3:00 மணிக்கு எழுந்து மாட்டுக்குத் தண்ணீர் வைத்து, கொட்டத்தைக் கூட்டிச் சுத்தம் செய்துவிட்டு, 4:00 மணிக்கு பால் கறந்து விட்டு, கஞ்சிக்காய்ச்சிக் குடித்துவிட்டு, 5:00 மணிக்குப் புறப்பட்டு 3, 4, 5 மைல்கள் நடந்து 6:00 மணிக்கு நகரத்துக்கு வந்து நகரத்து மக்களை 'அய்யா பாலு' 'அம்மா பாலுகாரி நான்' என்று சொல்லிக் கதவைத்தட்டி எழுப்பி பால் ஊற்றிவிட்டுப் போகிறார்கள். தங்கள் பிள்ளை குட்டிகளுக்குப் பால், நெய் ருசியே தெரியாமல் செய்துவிடுகிறார்கள். இதற்கு "நகரத்தார் பணம் கொடுக்கிறார்கள் என்பது உண்மைதான்" கிராமத்தான் கையில் கிடைத்த இந்தப் பணம்தான் என்ன ஆகிறது? போலீசுக்கு ஒரு பங்கு. முனிசிபல் சிப்பந்திகளுக்கு ஒரு பங்கு. போனது போக கனமாக ஏதாவது மீதியிருந்தால் அது வக்கீலுக்கும், அதிகாரிகளுக்கும் போகிறது.

### தானியம் விற்பது

நல்ல பெரிய விவசாயி என்பவனும் கிராமத்தில் இருந்தால் இதுபோல்தான். கிராமத்தான் பாடுபட்டுப் பயிராக்கித் தானியமாக்கி

நகரத்துக்குக் கொண்டு வந்தால், நகர வியாபாரி கிராமத்தானின் பயிர்ச்செலவு - மூட்டுவலிக்குக்கூட பத்தும் பத்தாமல் கணக்குப் போட்டு விலைபேசி ஒன்றுக்கு ஒன்றேகாலாக ஏமாற்றி அளந்து வாங்கிக் கொண்டு மொத்தக் கிரையத்தைத் "தரகு, மகிமை, சாமிக்காசு, நோட்டு வட்டம், வாசக்காரிக்கு, கலாஸ்காரனுக்கு, வெற்றிலை பாக்குச் செலவு" என்றெல்லாம் பல செலவுக் கணக்குப் போட்டுப் பிடித்துக் கொண்டு மீதி ஏதோ கொஞ்சம் கொடுக்கிறான். பணத்தை மொத்தமாகக் கண்டறியாத கிராம விவசாயி தன்மீது கருணை வைத்து, கடவுள் இவ்வளவு ரூபாயை கைநிறையக் கொடுத்தார் என்று கருதிக்கொண்டு காப்பி சாப்பிட்டு, சினிமா பார்த்து விட்டு ஊருக்குப் போகிறான். வியாபாரியோ இந்த சரக்கை வாங்கி, இருப்பு வைத்து, அதிக விலைவரும்போது விற்று லாபமடைந்து லட்சாதிபதியாகி மாடமாளிகை கட்டிக்கொண்டு கிராமவாசியை வண்டி ஓட்டவும், மாடு மேய்க்கவும், வீட்டு வேலை செய்யவும், உடம்பு பிடிக்கவும் வேலைக்கமர்த்திக் கொள்ளுகிறான்.

சர்க்காருக்கும் கிராமவாசி என்றால், கசாப்புக் கடைக்குப் போகும் ஆடுகள் போலக் காணப்படுகிறார்கள்.

ஆகவே, கிராமம் என்பது தீண்டப்படாத மக்கள் நிலையில்தான் இருந்து வருகிறது. கிராமத்தார் அல்லாத மற்றவர்களுக்கு உழைப்பதற்கு ஆகவே இருந்து வருகிறது. இந்த நிலையில் அந்த அடிப்படையை வைத்துக் கொண்டு கிராமத்தை எவ்வளவு சீர்திருத்தினாலும் கிராமம் "சூத்திரன் - தீண்டாத ஜாதியான் " நிலையில்தான் இருக்கும்.

எனவே, சமுதாயத்தில் மக்கள் மனிதத் தன்மை பெறவேண்டுமானால் பிராமணன் என்று ஒரு ஜாதியும், பறையன் என்று ஒரு ஜாதியும் அடியோடு இல்லாமல் மனிதன் என்கின்ற ஜாதிதான் இருக்க வேண்டும் என்று எப்படிக் கருதுகிறோமோ அதுபோல், ஊர்களிலும் பட்டணம், நகரம் என்று சில ஊர்களும் கிராமம், குப்பைக்காடு இல்லாமல் பொதுவாக ஊர்கள்தான் இருக்கவேண்டும் என்று ஆக்கப்பட வேண்டும்.

**வருண விகிதமே**

வருணாசிரம தர்மத்தைப் போல்தான் கிராமங்களும் என்பதற்கு மற்றொரு உதாரணம் பாருங்கள். ஜனத்தொகைப்படி 100க்கு 90

பேர்கள் 4ஆவது, 5ஆவது வருணத்தார்கள், 10 பேர்கள்தான் மேல் வருணத்தார்களாக (முதல் மூன்று வருணத்தார்களாக) இருப்பார்கள். அதுபோலத்தான் மொத்த ஊர்களில் 100க்கு 90க்கு மேற்பட்ட ஊர்கள் கிராமங்களாக இருக்கின்றன. அதாவது இந்தியா பூராவும் இலட்சம் கிராமங்கள் என்று தலைவர் சொன்னார். ஆனால் பட்டணங்கள், நகரங்கள் 75000 கூட (100க்கு 10 கூட) இருக்காது.

**படிப்பு**

மற்றும் பார்க்கப் போனால் பட்டணத்தில் உள்ள ஒரு கைவண்டி இழுப்பவன், ஒரு கோர்ட்டுப் பியூன், ஒரு பிச்சையெடுக்கும் புரோகிதன், மணியாட்டும் அர்ச்சகன் ஆகிய இவர்கள் பிள்ளைகள் S.S.L.C., B.A., இஞ்சினீயர், டாக்டர், I.C.S., கூடப் படிக்க முடிகின்றது. ஆனால், கிராமத்தில் 100 ஏக்ரா, 200 ஏக்ரா உள்ள குடியானவன் மகன் கூட எழுதப் படிக்கக் கற்றுக் கொள்ள வேண்டுமானால் வரும்படியில் பகுதி செலவாகிறது. ஏழைக் குடியானவன் மகனுக்கு நடக்கத் தெரிந்ததும் மாடு மேய்க்க வேண்டியதாகத்தான் முடிகிறது. பட்டணங்களில் இருப்பதில் ஒரு கக்கூசு எடுப்பவர், வீதி கூட்டுபவர் குழந்தையும் கட்டாயமாகப் படித்து ஆகவேண்டும் என்று சர்க்கார் உத்தரவு போடும். இலவசப் பள்ளியும் வைக்கும். ஆனால், கிராமத்தான் தன் மகனைப் படிப்பிக்க நகரத்துக்கு அனுப்ப வேண்டும். அங்கு மேற்பார்வை இல்லாமல் சிகரெட்டு, பீடி, (TODDY)டாடி(கள்), பிராந்தி குடித்து நாசமாக வேண்டும். இதற்கு அருத்தம் என்ன?

**ரேஷன்**

இவ்வளவு சங்கதி ஏன்? ரேஷனை எடுத்துக் கொள்ளுங்கள். பட்டணத்திலே இருப்பவர்கள் கடவுள்களுக்கு நாட்டுக்கோட்டையார் படி அளப்பதுபோல், ஆளுக்கு இவ்வளவு என்று சர்க்காரால் அளவு அளிக்கப்பட்டிருக்கிறது. கிராமத்தான்களுக்கு அதுவும் தானியங்களை உற்பத்தி செய்யும் கிராமத்தான்களுக்கு ரேஷன் "கடவுளிடம் தான்" ஒப்படைக்கப்பட்டது. "கடவுள் தான்" அவர்களுக்குப் படி அளக்க வேண்டும். அதாவது ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி நகரத்தானிடம் திருட்டுத்தனமாய் வாங்கிக் கொண்டு போகிறார்கள். பாடுபட்டு விளைவித்ததைக் கொண்டு வந்து வியாபாரிடம் கொடுத்துவிட்டு அதுவும் திருட்டுத் தனமாக வாங்கிக் கொண்டு போக வேண்டியிருக்கிறது.

## உழைப்பு

மேலும், நகர வாழ்க்கை நகரத்தில் இருந்தால் 100க்கு 90க்கு மேற்பட்ட மக்களுக்கு உடலுழைப்பு இல்லாத சுகவாழ்வு வாழ முடிகிறது. கிராம வாழ்வு கிராமத்தில் இருந்தால் 100க்கு 90 பேர் உடலுழைப்பு வேலையே செய்தாக வேண்டும். அவர்களுக்குள் ஒரு சிறு தகராறு, சண்டை, விவகாரம் ஏற்பட்டாலும் விவகாரப் பொறுமானத்தைவிட அதிகமான செலவு செய்து நகரத்துக்குப் பல தடவை நடந்து நீதிபெற வேண்டும். இதன் பயனாய்ப் போக்கிரிகளுக்கும், செல்வவான்களுக்கும் அடங்கி வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது.

## கிராமாதிகாரி

இந்த லட்சணத்தில் கிராமாதிகாரிக்குச் சம்பளம் மாதம் 15 ரூபாய். அவர்களுக்கு சப்ளை, தங்கள் நிலைமையை, அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ளச் செலவு, குடும்பச் செலவு, நகர அதிகாரிகளுக்குக் கப்பம் ஆகியவைகளுக்கு மாதம் குறைந்தது 100 ரூபாயாவது வேண்டியதாகி விடுகிறது. இப்படி தேவையாயிருக்கிற அதிகாரிகளிடமிருந்து எப்படி நீதியை எதிர்பார்க்க முடியும்? அந்தக் கிராமாதிகாரியும், கிராமத்தானுக்கு அதிகாரி. ஆனால் நகரத்தானுக்குச் சிப்பந்தி. ஒரு தாலுகா சேவகன் கிராமாதிகாரியை “ஏ சேடூர்” “ஏ அணைநாவிதன்பாளையம்” என்று கூப்பிடுவான்! கிராமத்தானுக்குத் தொழிலோ நம் விவசாயமும், கால்நடை மேய்ப்புமாகும்.

## விவசாயத்தின் தன்மை

விவசாயம் 200 வருஷத்திற்கு முன் இருந்தமாதிரிதான் இன்றும் இருக்கிறது. அதில் நீர்ப்பாய்ச்சல் வசதி, நீர் நிலை, தேக்கம் ஆகியவை ஏற்பட்டு, சில நிலங்களுக்குப் புதிதாய் நீர்ப்பாசன வசதி ஏற்பட்டது என்பதல்லாமல் விவசாயத்தில் குறிப்பிடத்தக்க மாறுதல் ஒன்றும் ஏற்படவில்லை. சர்க்காரின் விவசாய இலாகாவானது சில பேருக்கு உத்தியோகத்தைத்தான் கொடுத்தது. அதுவும் விவசாயத்தைத் தொழிலாகக் கொள்ளாத பரம்பரைக்கே பெரிதும் உத்தியோகமாய் முடிந்தது என்பதல்லாமல் மற்றபடி விளைபொருளில் மாறுதல் இல்லை; விளைவு அளவில் கூடுதல் இல்லை; விவசாய முறையில் மாற்றம் இல்லை. விவசாயிகள் விளைபொருளின் சரியான விலையை அனுபவிக்க வழியில்லை. விவசாயி விவசாய ஞானம் பெற வழி இல்லை. விவசாயிகள் விஷயத்தில் சர்க்கார் எடுத்துக் கொண்ட

மற்ற முயற்சி என்ன என்று பார்ப்போமானால் மேல் நாட்டாரைப் போல் இந்நாட்டு விவசாயிகள் எல்லோரும் படித்த மக்கள் என்று கருதிக்கொண்டு அவர்களுக்கு அறிவுறுத்தத் துண்டுப் பிரசுரம் மூலம் சில முறையைக் கையாண்டார்கள் என்பதைத் தவிர, அவர்கள் பெரும்பாலோர் படிப்பும் நாகரிகமும் இல்லாதவர்களாகப் பட்டணங்களுக்கு வெகு தூரத்தில் இருக்கிறது. நாகரிகமும், பகுத்தறிவு அற்ற மக்கள் என்கின்ற எண்ணமுமே இல்லாமல் அவர்களுக்கு நலஞ்செய்யும் வழிகளைக் கையாண்டிருக்கிறார்கள்.

**திட்டம்**

உண்மையில் கிராமங்களைச் சீர்திருத்த வேண்டுமானால், நான் சொல்லப் போகும் முக்கியமான காரியங்களைச் செய்யவேண்டும். விவசாயம் உடலுழைப்பில் நடைபெறுவதை மாற்றி அதை ஒரு தொழில்முறையாக, அதுவும் இயந்திரத் தொழில் முறையாக - இண்டஸ்ட்ரியல் (Industrial) ஆக்கப்பட வேண்டும்.

உழுவதும், விதைப்பதும், அறுப்பதும் இயந்திரத்தால் செய்யப்பட வேண்டும். கிணறு வெட்டுவதும், தண்ணீர் இறைப்பதும், பாய்ச்சுவதும் இயந்திரத்தால் செய்யப்பட வேண்டும். அந்த அளவுக்குப் பூமிகளைத் திருத்தி இணைக்க வேண்டும். அதற்குப் பயன்படாத பூமியைத் தனிமைப்படுத்தி அடிக்கடி பாடுபடவேண்டிய அவசியம் இல்லாத பயிர் செய்யவேண்டும்.

விளைபொருள்களால் ஆக்கப்படும் பண்டங்களை ஆங்காங்கே விவசாயிகள் கூட்டுறவு முறையில் ஆக்கப்பட்டு அந்தப் பயன் விவசாயிகளுக்கே கிடைக்க வேண்டும். பல கிராமங்களை ஒன்றாக இணைத்து ஒரு சிறு நகரமாக ஆக்கி அதில் பள்ளிக் கூடம், ஆஸ்பத்திரி, பார்க், சினிமா, டிராமா, தமாஷ் அறை, வாசகசாலை, புத்தகசாலை, ரேடியோ நிலையம், நல்ல ரோடு, கால அளவுப்படி போக்குவரத்துள்ள பஸ் ஸ்டேஷன், போலீஸ் ஸ்டேஷன், நன்றாய் படித்த ஒரு நீதிபதி, சகல சாமான்களும் கிடைக்கத்தக்கக் கடைகள் ஆகியவைகளை ஏற்படுத்த வேண்டும்.

இயங்கும்படியான சுற்றுப்பயணக் கண்காட்சி சாலைகள், அடிக்கடி பற்பல விதத்தில் அமைத்து ஊர்கள் தோறும் சுற்றிச் சுற்றி வரும்படியாகவும் ஆன காரியங்கள் செய்யவேண்டும்.

ஆங்காங்கு அப்பீல் கோர்ட்டுகள், குறைதெரியும் அதிகாரிகள் சுற்றுப் பிரயாணம் செய்து ஆங்காங்கு வாராவாரம் கேம்ப் போடவும் ஆன ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், சென்னை 10 லட்சம் ஜனத்தொகை கொண்ட நகரம். கோவை ஒரு லட்சம் ஜனத்தொகை கொண்ட நகரம். ஈரோடு 50,000 ஜனத்தொகை கொண்ட நகரம். இதுபோலவே இப்போது கிராமமாகப் பாவிக்கப்படும் ஈரோட்டுக்குப் பக்கத்தில் உள்ள கொல்லம்பாளையம், மூலப்பாளையம், சூரம்பட்டி, மேட்டுவலசு என்கின்றவை போன்ற பக்கப்பக்கக் கிராமங்கள் ஒன்றாகப் பிணைக்கப்பட்டு ஏதோ ஒரு பெயர் கொண்ட 'சர்க்கிள்' ஆக்கி 2500 அல்லது 5000 ஜனத்தொகை நகரமாக ஆக்கிவிட்டு அதை நகரத்தார்கள், தரகர்கள் சுரண்ட முடியாமல் செய்ய வேண்டும்.

"நகரத்தார்களுக்காகத்தான் அவர்கள் வாழ்கிறார்கள்; வாழவேண்டும்" என்று சொல்லப்படுவதை அடியோடு மாற்ற வேண்டும். அதோடு கூடவே அந்த இடங்களில் அவற்றிற்குத் தக்கபடி இயந்திரத்தால் செய்யப்படும் சிறு சிறு தொழிற்சாலைகளை நிறுவி அவர்கள் வேறு ஊருக்குப் பிழைப்புக்குப் போகாதபடி பிழைப்பு ஏற்படுத்த வேண்டும்.

கிராமத்தான், பட்டிக்காட்டான், குப்பைக் காட்டான் என்கின்ற பெயர்கள் ஒரு மனிதனுக்கு ஏன் இருக்க வேண்டும்? அதுவும் பாடுபட்டு உழைக்கும் மனிதனுக்கு ஏன் இருக்க வேண்டும்?

ஆதலால், அப்பெயர்கள் இல்லாமல் செய்யப்பட்டு விட வேண்டும்.

**மேல் நாடுகளில்...**

மேல்நாடுகளில் பெரும்பான்மையான கிராமங்கள் நான் விரும்புகிறபடிதான் இருக்கின்றன.

அதாவது தார்ரோடு, குழாய் தண்ணீர், எலக்ட்ரிக் விளக்கு, எலக்ட்ரிக் பவர், பஸ் சர்வீஸ், பள்ளிக்கூடம், விளையாட்டு மண்டபம், சமநீதி, தொழிற்சாலை ஆகியவை இல்லாத இடங்கள் (கிராமங்கள்) மேல் நாடுகளில் காண்பது மிகமிக அதிசயமாகும். ரஷ்யாவில் மாத்திரம் சில இடங்கள் கிராமங்கள்போல் காணப்படுகின்றன. அதுவும் இதற்குள்

நகரமாகி இருக்கும். மற்றபடி அய்ரோப்பாவில் கிராமங்கள் என்கிற நிலை இல்லவே இல்லை. இருந்தபோதிலும், அது அந்த இடத்திற்கு ஏற்ற வாழ்வாய் இருக்கலாமே தவிர "பிராமணனுக்குத் தொண்டு செய்வதற்கே கடவுள் சூத்திரர்களை, பஞ்சமர்களைப் படைத்தார்" என்பதுபோல் "நகரத்தார் நல்வாழ்வு வாழ்வதற்கே கிராமங்கள் ஏற்பட்டன." என்கின்ற முறையில் கிராமங்கள் அங்கு இல்லை. அங்கு ஏதாவது ஒன்றிரண்டு இருந்தபோதிலும் இங்கு இருக்கக்கூடாது என்று சொல்லுவேன்.

அப்படியானால் விவசாயம் யார் செய்வது? யார் பூமியைப் பயிர் செய்வது? என்று கேட்கப்படலாம். "இது 'கக்கூசு' எடுக்கும் சக்கிலி, பறையர், ஒட்டர் என்பவர்களுக்குப் படிப்புக் கொடுத்து மேன்மக்களாக ஆக்கிவிட்டால் கக்கூசு எடுப்பவர்கள் யார்?" என்று கேட்பதுபோல் கேட்கப்படுவதாகும். அதற்கு என்பதில் "அந்தத் தொழில்களை நாம் எல்லோரும் (எல்லா இடத்தில் உள்ளவர்களும்) விகிதாசாரம் பங்கு போட்டுக் கொள்ள வேண்டும் " என்பதுதான்.

**கீழான தொழில்**

கீழான தொழில், ஈனமான தொழில், கஷ்டமான தொழில், சரீர உழைப்பு அதிகமாகவும், பயன்மிக்க அற்பமாகவும், குறையாகவும், வாழ்வில் இழிவாகவும் இருக்கும்படியான தொழில் முறைகளை நாட்டில் இல்லாமல் செய்யவேண்டும். அதுதான் நாட்டு முன்னேற்றமாகும்.

கப்பல் கட்டி எவனோ ஒருவன் கோடீஸ்வரனாவது முன்னேற்றமாகாது. எங்கேயோ ஓர் இரும்புத் தொழிற்சாலை வைத்து யாரோ கோடீஸ்வரனானால் நாட்டுக்கு முன்னேற்றமாகி விடாது.

நான் கூறுகிற முன்னேற்றம் செய்ய முடியவில்லையானால், அதற்கு - அதாவது அப்படிப்பட்ட இழிவான, கீழான, பிரயாசையான வேலை செய்பவர்களுக்கு அதிக லாபமும், சலுகையும், மேன்மையும் இருக்கும்படியான பிரதிபலன்அடையச் செய்யவேண்டும். இரசாயன முறை, விஞ்ஞான முறை, யந்திர முறை முதலியவைகளைக் கையாண்டு அவைகளை கிராமங்கள் என்பவைகளில் இருந்து தொடங்குவோமேயானால் இந்தப் பிரச்சினைகள் சுலபத்தில் தீர்ந்துவிடும். கிராமம் என்கின்ற பெயரும் நிலையும் தானாக மாறிவிடும்.

இதைப் பொதுவுடைமை என்றோ சமதர்மம் என்றோ முட்டாள்தனமாய் கருதாமல் முற்போக்கு என்ற முறையில் சிந்தித்தால்தான் இதில் உள்ள நியாயமும், உண்மையும் விளங்கும்.

தொழிலாளிகளும், கிராமவாசிகளும் முன்னைவிட இப்போது சிறிது பணம் அதிகம் சம்பாதிப்பதைக் கொண்டு திருப்தி அடையக்கூடாது.

**நான் கூறுகிற முன்னேற்றம் செய்ய முடியவில்லையானால், அதற்கு – அதாவது அப்படிப்பட்ட இழிவான, கீழான, பிரயாசையான வேலை செய்பவர்களுக்கு அதிக லாபமும், சலுகையும், மேன்மையும் இருக்கும்படியான பிரதிபலன் அடையச் செய்யவேண்டும்.**

தொழிலாளிக்கும், முதலாளிக்கும் முன் இருந்த வித்தியாசமும், கிராமத்தானுக்கும், பட்டணத்தானுக்கும் முன் இருந்த வித்தியாசமும் பணப்பெருக்கினால் முன்னைவிட அதிகமாகிவிட்டதே தவிர குறையவில்லை.

அந்த வித்தியாசமானது முன்னைவிட அதிகமான பேதத்தையும், இழிவையும், மனக்குறையையும் உண்டாக்கி மிக்க கீழ்மகனாக ஆக்கிவிட்டது.

பேதமற்ற இடம்தான் மேலான, திருப்தியான இடமாகும்.

(31.10.1944 அன்று ஈரோட்டில் தோழர் பி.சண்முக வேலாயுதம் அவர்களால் நடத்தபட்டுவந்த கிராமதிகாரிகளின் பயிற்சிப் பள்ளியின் ஆண்டு விழாவில் கலந்து கொண்டு பெரியார் ஈ.வெ.ரா.ஆற்றிய சொற்பொழிவு)

– ‘குடிஅரசு’ 11.11.1944

○○○


## இணைப்பு 1

# பெரியார் புரா சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஏ.பி.ஜே.அப்துல்கலாம் பாராட்டு

‘பெரியார் புரா’ திட்டம் தமிழ்நாட்டில் தஞ்சாவூர் பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தால் செயல்படுத்தப்படுகிறது. பல்கலைக்கழகத்தின வளாகத்திற்குள்ளேயே பெரும்பரப்பில் ‘ஜெட்ரோபா’ மரங்கள் நடப்பட்டுள்ளன. இயற்கையாக தாவரங்களில்இருந்து தயாரிக்கப்படும் டீசல் மற்றும் இதர பசுமைத் திட்டங்கள் பற்றிய செய்தியையும், விழிப்புணர்வையும் ‘புரா’ திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் பகுதிகளில் பரப்பும் பணியை பல்கலைக்கழகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இது தொடர்பாக பல்கலைக்கழகம் பல மய்யங்களை நடத்தி வருகிறது. அவற்றுள், சுற்றுச்சூழல் நட்புடன் கூடிய செயல்பாடுகளும், ஆய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ள மூன்று நிறுவனங்களை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

### 1. உயிரியல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பற்றிய பெரியார் ஆய்வு மய்யம்

காடுகளின் அழிப்பைத் தடுத்து மேலும் புதிய மரங்களை பெரும் அளவில் நட்டு, பாதுகாத்து வளர்ப்பது மற்றும் தரிசு நில மேம்பாட்டுக்கான உயிரியல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட செயல் திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் கிராமப்புறப் பகுதிகளை முன்னேற்றம் பெறச் செய்ய கிராமப்புறப் பகுதிகளை முன்னேற்றம் பெறச் செய்ய கிராமப்புற மக்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்ட இம்மய்யம் 1996ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்புகளை




உருவாக்கும் நோக்கத்துடன் கூடிய பல்வேறு விவசாயத் தொழில் நுட்பங்களில் நேரடிப் பயிற்சி அளிக்கும் முறையை இப்பகுதியில் உருவாக்கி வளர்ச்சி பெறச் செய்துள்ளது இம்மய்யம்.

**2. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் இயற்கை ஆற்றல்களை நிருவகிக்கும் பெரியார் மேலாண்மை மய்யம்:**

கனடா நாட்டின் கேப் பிரிட்டன் பல்கலைக்கழகம் மற்றும் நியூபவுண்ட் லேண்டில் உள்ள வட அட்லாண்டிக் கல்லூரி ஆகியவற்றுடன் இணைந்து உருவாக்கி அமைக்கப்பட்டுள்ளது. இம்மய்யம், கழிவுநீரை சோதனை செய்து தூய்மைப்படுத்துவது, அதனைச் சீர் செய்வதற்கான தொழில்நுட்பங்கள், தொடர்ந்து தானாகவே மின் ஆற்றலை உருவாக்கிக் கொள்ளும் மரபுசாரா மின் உற்பத்தி தொழில் நுட்பங்கள் பற்றிய பயிற்சித் திட்டங்களை இம்மய்யம் நடத்துகிறது. தஞ்சாவூர் நகராட்சியின் திடக் கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் ஒரு திட்டத்தில், ஜெர்மன் நாட்டு ஆச்சென் பல்கலைக்கழகத்துடன் இணைந்து இம்மய்யம் தற்போது ஈடுபட்டுள்ளது.

**3. மரபுசாரா முறைகளில் மின் ஆற்றலை உருவாக்கும் திட்டங்களுக்கான பெரியார் பயிற்சி மய்யம்:**

மரபுசாரா எரிசக்தித்துறை அமைச்சகத்துடன் கூட்டு முயற்சியாக தொடங்கப்பட்டு செயல்பட்டு வருவது இந்த மய்யம் பல்வேறுபட்ட குழுக்களின் தேவைக்கு ஏற்ப, எரிபொருள் சேமிப்பு சிக்கனம், மரபுசார் முறையில் மின் ஆற்றல் உருவாக்கம் ஆகிய பாட திட்டங்களுக்கான பயிற்சியை, ஒருநாள் பயிற்சியிலிருந்து ஒருமாத பயிற்சி வரை இம்மய்யம் அளிக்கிறது. மகளிர் சுய உதவி குழுக்கள் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வியாளர்கள் மற்றும் மரபுசாரா எரிசக்தி உற்பத்தியில் ஆர்வம் கொண்டிருப்பவர்கள் என்று பல்வேறு தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் இப்பயிற்றி வடிவமைக்கப்பட்டுள்ளது.

*(Target 3 Billion by A.P.J.Abdul Kalam and Srijan Pal Sing - page 179)*

## Environmental mission in Periyar PURA

Periyar PURA is operated by the Periyar Maniammai University. Thanjavur in the state of Tamil Nadu. Large areas of the University campus itself have been planted with jatropha trees and the university is working on spreading the message of biodiest and other green initiatives across the PURA region. The university operates many centres out of which three are directly linked with environmental friendly activity and research.

They are:

### 1. Periyar Research Organization for Biotechnic and Ecosystem (PROBE)

This is an outreach wing started in the year 1996 with a prime focus on rural development through afforestation and biotechnology-based activities for the development of wastelands PROBE has deveoped agro-modules in this locality for imparting hands-on training in various agro techniques in order to generate employment opportunities for the local people.

### 2. Periyar Centre for Enviroment/Energy Management (PCEM):

This centre was set up in collaboration with Caps Breton University (formerly University College of Cape Breton), Nova Scotia and the College of the North Atlantic (CNA) Newloundland, Canada. It conducts traing programmes in analysis and treatment of waste water, remediation technologies and renewable energy technologies. The centre is currently involved in a project on the @Generation of Power from Municiapal Solid Waste in Thanjavur in joint technological collaboration with RWTH University, Aachen, Germany.

### 3. Periyar Renewable Energy Training Institute (PRETI):

PRETI is a joint venture with the Ministry of Non-conventional Energy Sources (MNES) Government of India. it offers training courses in the use of renewable enery and energy conservation to suit

the needs of various groups for a duration of one day to one month. The courses are available to self-help women's groups. unemployed youths, panchayat presidents, coucil memebrs, govrment officials, students, faculty members and others interested in using renewable energy.

*(Source: Target 3 Billion by A.P.J. Abdul Kalam and Srijan Pal Sing - Page - 179)*

**பெரியார் வழியில் கிராம நகர பேதம் ஒழிப்பு இளைஞர்களின் ஆற்றலை ஈடுபடுத்துதல்**

சமூகத்தின் ஆதரவை உருவாக்கித் திரட்டி, ஆக்கபூர்வமான செயல் திட்டங்களுக்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ள 'பெரியார் புரா' மக்களைப் பங்கெடுத்துக் கொள்ளச் செய்வது போன்ற ஒரு முன்மாதிரியாக திட்டத்தைப் பின்பற்றுகிறது. சமூகப் பணியில் (Social work) முதுகலைப் பட்டம் (MSW) எம்.பில்., மற்றும் முனைவர் பட்டப் படிப்புகளுடன், இயற்கை மற்றும் உயிரியல் இயற்கை எருவைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் விவசாயம், நிலப்பரப்பைப் பயன்படுத்தி மேம்படுத்துதல், மூலிகைகளின் மூலம் சிகிச்சை அளித்தல் மற்றும் விவசாய உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துதல் போன்ற பாடங்களில் பட்டயப் படிப்புகள் போன்ற கிராமப்புற வளர்ச்சிக் களத்திற்கான பல பாடத் திட்டங்களையும் 'பெரியார் மணியம்மை பல்கலைக்கழகம்' நடத்தி வருகிறது. இந்தப் புரா திட்டத்தின் ஒரு பகுதியாக ஆவதற்குத் தகுந்த தொழில்நுட்ப அறிவு கொண்ட தலைவர்களை இந்தப் பட்டயப் படிப்புகள் தயாரித்து அளிக்கின்றன.

'பெரியார் புரா' தனது செயல்பாட்டுக்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்டுள்ள கிராமப் பகுதிகளில் உள்ள குடும்பங்களை இச்செயல் திட்டங்களில் பங்கெடுத்துக் கொள்ள தயார் செய்யும் பொறுப்பை சமூகப்பணி முதுகலை பட்டப்படிப்பில் பயிலும் மாணவர்களுக்கும் தேசிய சேவைத் திட்டத்தில் தாங்களாக விரும்பி செயலாற்ற வருபவர்களுக்கும் அளிக்கிறது.

ஒவ்வொரு மாணவருக்கும் அய்ந்து குடும்பங்கள் ஒதுக்கப்படுகின்றன. அவர்களின் பட்டப்படிப்பு காலம் முழுவதிலும் இந்தக் குடும்பங்களை முன்னேற்றத்தில் பங்கெடுத்துக் கொள்வதில்

வழிநடத்திச் செல்வதும் அதில் அவர்கள் அடையும் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதும், மாணவர்களது பாடத் திட்டத்தின் படியும், புறப்பாடத் திட்டத்தின்படியுமான கடமையாக இருக்கும். தற்போதுள்ள தொழில்நுட்ப அறிவை கிராமப்புற குடும்பத்தினருக்குக் கற்பிப்பது, அவர்கள் விரும்பும் பயிற்சியை அளிப்பது, கல்வி மற்றும் உடல்நலம் பேணுதல்பற்றிய அடிப்படை அறிவை அளிப்பது, அவர்களின் மனங்களிலிருந்து மூடநம்பிக்கைகளை அகற்றுவது ஆகியவையும் இவற்றில் அடங்கும். மாணவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட குடும்பங்களைக் கண்காணித்து அவர்கள் அடைந்துவரும் முன்னேற்றங்களை ஆவணப்படுத்துவார்கள். இதன்மூலம் ‘பெரியார் புரா’ திட்ட நடைமுறையினை எந்தவித பாகுபாடும், விருப்பு வெறுப்பும் அற்றமுறையில் மதிப்பீடு செய்து கண்காணிக்க இது உதவுகிறது.

இவ்வாறு மாணவர்கள் கிராமப்புற மக்களுடன் இணைந்து செயலாற்றுவதனால், ஒருவரைப்பற்றி மற்றவருக்கு மரியாதையும், மதிப்பும் தோன்றி வளர்கிறது. இது கிராமப்புற வாழ்க்கை பற்றிய அடிப்படை நிலையிலான புரிதலை மாணவர்களுக்கு கைமேல் கிடைக்கச் செய்வதால், வாழ்க்கை பற்றிய அவர்களின் கண்ணோட்டம் விரிவடைய பயன் நிறைந்ததாக அமைகிறது. மாணவர்கள் எதிர்காலத்தில் தாங்கள் விரும்பி தேர்ந்தெடுத்துக் கொள்ளும் தொழில் வாழ்க்கைக்கும் அது பெரிதும் உதவுகிறது.

*(TARGET 3 BILLION - A.P.J.ABDULKALAM &*
*JANAPAL SING - g¡f« 200 )*

## Periyar PURA - Involving the youth force

The Periyar PURA follows a participative model for generating community support and ownership for the initiatives being undertaken. Periyar Maniammai University runs many programmes pertaining to the deveopment domain including masters in Social Work (MSW), M.Phil and Ph.D. in Social Work and certificate courses in organic farming, landscaping, herbal physiotheraphy and agricultural marketing. These certificate programmes are providing technological leaders to the local community to become a part of the PURA mission.

Students of MSW and volunteers for the National Service Scheme (NSS) are given the resposibility of monitoring the rural families in the PURA region. Five families are allottedto each student and, throughout their academic tenure, as part of their curricular or co-curricular activities. They are required to guide the families and track their progress. This includies imparting to them knowledge of the technological processes available, training options, basic knowledge about education and health care and ridding their minds of superstitions. The students track their allotted families and document their progress thereby helping to create an unbiased evaluation and monitoring system for the Periyar PURA. This programme of interaction forsters a sense of mutual respect and understanding and gives the students a hands-on, grass roots level understanding of rural life, which is useful for expanding their vision of life. It also helps in their future professional life in the field of their choice.

*(Source: Target 3 billion by A.P.J.Abdulkalam & Srijan Pal Singh - Page - 200)*

ooo





கிராமநிலை குப்பை மேடு, கக்கூஸ், ஜலதாரை நாற்றம், தரித்திரக் குச்சுகள், நோய் உருவங்கள், முட்டாள்தனமும், மூடநம்பிக்கையும் தாண்டவம் என்பவை போன்றவை அல்லாமல், வேறு என்ன காணமுடிகின்றது என்று நீங்களே யோசித்துப் பாருங்கள். நமது நாட்டில் வரிகள் முழுவதும் கிராமவாசிகள் உழைப்பையே அஸ்திவாரமாய்க் கொண்டதாகும். அவர்களை நாம் மனுஷ வர்க்கத்தில் சேர்ப்பதில்லை. ஆனால், அவர்களுக்காகவே பாடுபடுகிறோம் என்று வேஷம் போட்டு, நாம் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளுகிறோம்.

இந்நூலிலிருந்து...

9 789380 971636

நன்கொடை : ரூ.40/-